Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-12 | 28-07-2005 | வியாழக்கிழமை | ஓசை-160


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12149)

★ ஆக்கிரமிப்பு இராணுவம் உடன்வெளியேற வேண்டும்

★ சுதந்திர வாழ்வை நோக்கி அணி திரண்டுள்ளோம்

★ எமது இறைமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும்


# வவு. தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில்

# அனைத்து மாவட்ட பேராளர்கள் பிரகடனம்!

(வவுனியா)

எமது தாயக நிலத்தையும், கடலையும் ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவம் உடன் வெளியேற வேண்டும். எமது சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ்மக்கள் அணி திரண்டபடியே உள்ளோம். சர்வதேச சமூகம் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என நேற்று வவுனியாவில் நடந்த தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டில் பேராளர்களினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இம்மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் மேற்கூறப்பட்ட அம்சங்கள் முதன்மையாக வலியுறுத்தப்பட்டுள்ளன. இப்பிரகடனம் தொடர்பான விபரம் 7ஆம் பக்கத்தில்





## தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டை குழப்ப தீயசக்திகள் முயற்சி!

### -வவுனியா நகரில் தொடர் குண்டு வெடிப்புக்கள்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டைக் குழப்ப சில தீய சக்திகள் முயன்றுள்ளன.

வைரவப்புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு நடை பெற்றுக்கொண்டிருந்தபோது பிற்பகல் 2.00 மணியளவில் நகரசபை பூங்கா வீதியூடாக உந்துருளியில் வந்த இரு விஷமிகள் மாநாட்டு மண்டபத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் கைக்குண்டு ஒன்றை வீசிவிட்டு தப்பியோடியுள்ளனர்.

மேலும் மாலை 5.45 மணிக்கு கிளைமோர் ரகக் குண்டு அதே இடம் அருகே வெடித்தது.

(12ஆம்பக்கம் பார்க்க)

## நான்கு செய்தியாளர்கள் கைதாகி விடுதலை

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் செய்திகளை சேகரிக்கச் சென்று திரும்பிக்கொண்டிருந்த ஈழநாதம் செய்தியாளர்கள் இருவர் உட்பட நான்கு

(12ஆம்பக்கம் பார்க்க)

## கே-8 ரக குண்டுவீச்சு விமானங்கள் மூன்று கொழும்பை வந்தடைந்தன

(கொழும்பு)

சீனா நாட்டில் இருந்து கே-8 ரக யுத்த குண்டு வீச்சு விமானங்கள் சிறிலங்காவிற்கு நேற்றுமுன்தினமிரவு கொண்டுவரப்பட்டன. கட்டுநாயக்கா விமானப்படைத்தளத்தை வந்தடைந்த மூன்று கே-8 விமானங்களை சிறிலங்கா அரசாங்கத்திற்குக் கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் கொழும்பு கட்டுநாயக்கா விமானப்படைத்தளத்தில் நடைபெற்றுள்ளது.

சீனா நாட்டின் சிறிலங்காவுக்கான தூதுவர் சன்கொய்ங் விமானங்களை விமானப்படை

(12ஆம்பக்கம் பார்க்க)

# அறிஞர்கள், மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள் என ஆயிரக்கணக்கான பேராளர்கள் பங்கேற்ற மாநாடு!

### - மலையக, கொழும்பு பேராளர்களும் கலந்துகொண்டு சிறப்பிப்பு

(வவுனியா செய்தியாளர்)

தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும், கொழும்பு, மலையகத்தில் இருந்தும் ஆயிரக்கணக்கான பேராளர்கள் கலந்து கொண்ட தமிழ் தேசிய எழுச்சி மாநாடு நேற்று வவுனியாவில் வெகுசிறப்புற நடைபெற்றது.

வைரவப்புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்ற இம்மாநாட்டிற்கு திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன் தலைமை தாங்கினார். பொதுச்சுடரை கரும்புலி லெப். கேணல் போர்க் அவர்களின் தாயார் திருமதி மாப்பாணபிள்ளை ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியை லெப்.கேணல் விக்ரர் அவர்களின் தந்தையார் ச. மருசலீன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஈகச்சுடரினை கிளிநொச்சி தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் சு. பசுபதிப்பிள்ளை, முல்லைத்தீவு தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் ச.கனகரத்தினம், மட்டக்களப்புபைச் சேர்ந்த திருமதி மு. பொன்னையா, திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைச் செயலாளர் கௌரிமுகுந்தன், யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச்செயலாளர் சொலமன்சூசிறில், அம்பாறையைச்சேர்ந்த லெப்.கேணல் பாபாவின் சகோதரன் செ.கமலேஸ்வரன், வவுனியாவைச் சேர்ந்த மாவீரர் பெரியண்ணனின் மகன் செல்வன் பா.தர்சன், மன்னாரைச் சேர்ந்த கப்டன் -பாரத்,வீரவேங்கை தங்கேஸ் ஆகிய மாவீரர்களின் தாயார் திருமதி சந்தான் சந்தாள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

(12ஆம்பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்குண்டு

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் 16பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு- க.கரன் மே/ப V.ஜெகநாதன், மத்தியகல்லூரி முன்,மீனாட்சியம்மன் வீதி,ஆனந்தபுரம், கிளிநொச்சி. (6382)

வெல்டிங்மெசின் 8kwடைனமோ ராண்ஸ்போமர் England Dinamo 5kw ஏனைய உதிரிப்பாகங்கள் சகலதும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ந.லோகநாதன் (வெள்ளை) C/O முத்துசாமி அல்லாரைவடக்கு, கொடிகாமம். (6396)


## கட்டடம் திறப்பு

வவுனியா மாவட்டத்தின் பன்றிக்கெய்த குளம் கிராமத்தில் வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட புதிய அலுவலகம் இன்று காலை 10.00 மணிக்கு வைபவரீதியாக திறந்து வைக்கப் படவுள்ளது.


### விற்பனைக்குண்டு

NPHA -0133 பமர்ல் சுபூர் கலப்பை வெட்டுக் கலப்பை இத்துடன் பெட்டி புதிதாக எடுத்த லான்மாஸ்ரர் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு அமுதசுரபி உணவகம் (முன்பு சேரன் சுவையகம்) மல்லாவி. (6009)


# நுட்பமான அபிவிருத்தித்திட்டங்கள் பற்றி கருத்தில் கொள்ள முன் பலவீனங்களைச் சீர் செய்க!

### – தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

நுட்பமான அபிவிருத்தித் திட்டங்களைப்பற்றி கருத்தில் கொள்ளமுன் எமது பலவீனங்களைச் சீர்செய்யவேண்டும். ஐக்கியநாட்டு நிறுவனங்களும், குடும்பநல பணியகத்தினரும் கலந்துகொண்ட தாய்,சேய் நலன் மேம்பாட்டு கலந்துரையாடலில் தமிழீழ சுகாதார சேவைகள் பணியாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

*இலங்கையில் 2000ஆம் ஆண்டில் தொனிப்பொருளாக "சகலருக்கும் சுகாதாரம்" எனும் கூற்று உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று அரசியல் மற்றும் சமூகச்செல்வாக்குகள் சாதாரண மக்களை சுகாதார வசதிகள் சென்றடையாத தன்மைக்குக் காரணமாயிருக்கின்றது.

*மனிதாபிமான அடிப்படையில் குடும்ப சுகாதாரத்தினையும் மற்றும், சுகாதார சேவைகளையும் நோக்கவேண்டும். கடந்த காலங்களில் குடும்ப சுகாதாரம் உயர்தரத்தில் பேணப்பட்டது. ஆனால் இச்சேவைகள் வடக்கு கிழக்கு உள்ளடக்கிய அபிவிருத்தியடையாத பிரதேசங்களைச் சென்றடையவில்லை.

*சுகாதார சேவைகள் சகல மனிதர்களுக்கும் உரித்தானது. இது யுத்தம் உட்பட எவ்விதமான பேராபத்துக்களாலும் பாதிக்கப்படக் கூடாது. ஆனால் இந்நாட்டின் வடக்குக்கிழக்கு சுகாதார சேவைகளை வழங்க முடியாமைக்கு யுத்தம் ஒரு சாட்டாக இலங்கை அரசிற்கு இருக்கின்றது. கடந்த காலங்களில் குறைந்தளவிலாவது சுகாதார சேவைகளை வழங்குவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களும் எமது வளங்களும் உதவி புரிந்தது. இதனால் குறைவான வளங்களுடனும் மற்றும் அதியுயர் அர்ப்பணிப்புடனும் சுகாதாரம் வடக்கு கிழக்கில் குறிப்பிடத்தகீகதளவு பேணப்பட்டு வந்துள்ளது.

*யுத்தத்தின் பின் சர்வதேச நிதியிலிருந்தும் ஏனைய கடன்களிலிருந்தும் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளுடன் மக்களுடைய சுகாதார வசதிகளை முன்னேற்றுவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம். எனினும் அரசுடன் இணைந்து கடமைபுரியும் அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதிகளைச் சமனாகப் பிரிப்பதிலும் மற்றும் அவர்களுடன் கடமை புரிவதிலும் நாங்கள் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றோம்.

*உதாரணமாக வடக்கிற்கு உலகப் பிரசித்திபெற்ற யுனிசெவ்வின் பூகோள நிதியிலிருந்து சிறிதளவு நிதிமாத்திரம் விடுவிக்கப்பட்டிருக்கின்றது. வடக்கின் கிராமியப்பகுதிகளில் குடும்பநலன் உத்தியோகத்தர்களுக்காக உலக சுகாதார நிறுவனம் (W.H.O) வழங்கிய 200 உந்துருளிகளில் ஒரு சில மட்டும் போக்குவரத்து வசதி குறைந்த வடக்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

*இனங்காணப்பட்ட பிரதேசங்களின் வளங்களை முன்னேற்றுவதன் ஊடாக இந்நிலையினை திருப்திகரமாக மாற்றுவதற்கு சுகாதார சேவைத்திட்டங்களை உரிய வகையில் மாற்றுவதே ஒரே வழியாகும்.

*அதியுயர் பதவிப் பணிநிலையில் உள்ளவர்கள் மனிதாபிமான ரீதியிலும் மற்றும் எவ்வித வேறுபாடுகளுமின்றியும் திட்டங்கள் வரையவும் சேவைபுரியவும் வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## பணிநிலை வேண்டுகை

### பாண்டியன் வாணிபத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உள்ளன.

- கணக்குப்பதிவாளர், காசாளர், களஞ்சியக்காப்பாளர், உணவு பரிமாறுநர்.
- அகவை:- பொதுவானவை -18-45 வரை.
- கணக்குப்பதிவாளர்:- ஆண், பெண் இருபாலாரும்.
- களஞ்சியக்காப்பாளர், காசாளர், உணவுபரிமாறுநர் :- ஆண்கள் மட்டும்.
- தகைமை:-
  - 01) கணக்குப்பதிவாளர் :- உயர்தரத்தில் வர்த்தகம் பயின்றிருத்தல் வேண்டும்.
  - 02) காசாளர், களஞ்சியக்காப்பாளர் :- சாதாரண தரத்தில் 05 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
  - 03) உணவு பரிமாறுநர்:- முன் அனுபவம் உள்ளவர்களுக்கும், சிங்களம்,ஆங்கிலம் உரையாடத் தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் (உணவு ,தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும்)
- மேல் உள்ள பணிநிலையில் பட்டறிவு உடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, விசுவமடு பிரதேசங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- சம்பளம்:- நிதித்துறை சம்பளத்திட்டத்திற்கமைய.
- நேர்முகத் தேர்வு:-
  - 01) நாள் :- 05.08.2005 வெள்ளிக்கிழமை
  - 02) நேரம்:- காலை 10.00 மணி
  - 03) இடம்:- பாண்டியன் வாணிபம் நடுவப்பணிமனை வள்ளுவர்புரம் சந்தி (றெட்பானா சந்தி) விசுவமடு.
- நேர்முகத் தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.
- கல்விச்சான்று, குடும்பப்பதிவு அட்டை, அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

ஆளுகை,
பாண்டியன் வாணிபம்,
நடுவப்பணிமனை.

(சி.12461)



## வீரவணக்கம்

எம் இதயங்கள் அழுவதும்
அலைகள் அடிப்பதும்- உன்
மலர்வதன முகத்தைப் பார்ப்பதற்காய்.
ஆண்டுகள் பத்து மறைந்தாலும்
மறப்போமா உன் நினைவுகளை!



**லெப்.கவிதன்**
(சின்னராசா இந்திரகுமார்)
பாலிநகர்,வவுனிக்குளம்

குழந்தையாய் 07.03.1969 | மாவீரனாய் 28.07.1995

இல.23
சிவபுரம்,
வவுனிக்குளம்

தகவல்,-
சித்தப்பா குடும்பம்

(சி-12385)



# தமிழீழப் போக்குவரவுக்கழகம்

## பயணியர் பேருந்துப் புதியபணி

கிளிநொச்சி அரச அதிபரின் வேண்டுகைக்கு அமைவாக அரச பணியாளர்களின் நலன் கருதி 01.08.2005 ஆம் நாளிலிருந்து இப் போக்குவரவுப்பணி தொடங்கப்படுகிறது ஏன்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

### பூநகரி~கிளிநொச்சி~புளியங்குளம்

நேர ஒழுங்கு:-

| ஆலடி | பூநகரி | தம்பிராய்ச்சந்தி | நல்லூர் | பரந்தன் | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 06.30 | 06.40 | 06.55 | 07.10 | 07.50 | 08.10-08.30 | 08.50-09.10 | 09.45 | 10.30 |

### புளியங்குளம்~ கிளிநொச்சி~பூநகரி

நேர ஒழுங்கு:-

| | புளியங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | நல்லூர் | தம்பிராய்ச்சந்தி | பூநகரி | ஆலடி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | 02.30 | 03.15 | 03.50-04.10 | 04.30-04.45 | 05.05 | 05.45 | 06.00 | 06.15 | 06.25 |

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
கிளிநொச்சி.

(சி.12460)

# லண்டன்-எகிப்து தொடர் குண்டுவெடிப்புகளுக்கு அல்-ஹைதா காரணமல்ல, முஷாரப் பரபரப்புப்பேட்டி

(இஸ்லாமபாத்)

**"லண்டன்-எகிப்து தொடர் குண்டுவெடிப்புகளுக்கும் பின்லேடனின் அல்-ஹைதாவுக்கும் தொடர்பு கிடையாது. அவர் உத்தரவிட்டு நடந்தது இல்லை" என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறியுள்ளார்.**



லண்டன் தொடர் குண்டுவெடிப்பில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர். இதைத் தொடர்ந்து, எகிப்து நாட்டில் செங்கடல் அருகே உள்ள ஷாம் அல்ஷேக் நகரில் தொடர் குண்டுவெடிப்பு நடந்தது. இதில் 90 பேர் பலியானார்கள். இந்த சம்பவங்களுக்கு அல்ஹைதாவின் துணை அமைப்புக்கள் பொறுப்பு ஏற்பதாகக் கூறியிருந்தன. இதனால் பின்லேடன் உத்தரவின் பேரில்தான் இவை நடத்தப் பட்டதாக உலகம் நம்பிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கும், அல்ஹைதாவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறினார். லாகூரில் நிருபர்களிடம் அவர் தெரிவிக்கையில்;

லண்டன்-எகிப்து தொடர் குண்டுவெடிப்புகளுக்கு அல்-ஹைதாதான் காரணம் என்றும் அல்-ஹைதாவின் தலைமை பாகிஸ்தானிலுள்ளது என்றும் சொல்வது தவறானது. ஆதாரம் இல்லாதது.

பாகிஸ்தானில் இருந்த அல்-ஹைதாவின் தொடர்பு கட்டமைப்பு உடைக்கப்பட்டுவிட்டது. எனவே பாகிஸ்தானில் ஒருவன் இருந்து கொண்டு லண்டனிலோ, எகிப்திலோ நடக்கும் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவது என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும்.

அல்-ஹைதா என்பது ஒரு தோற்றம் தான் என்பதை உலகம் புரிந்துகொள்ள வேண்டும்.

பாகிஸ்தானில் இருந்து கட்டளைகள் அனுப்பக்கூடிய தலைமை அமைப்பு இல்லை. இதை நான் உலக நாடுகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். லண்டன்-எகிப்து என எங்கு தாக்குதல் நடத்தினாலும் அதைச் செய்தவர்கள் தங்களை அல்-ஹைதா எனச்சொல்லிக் கொள்வது வாடிக்கையாகிவிட்டது.

அல்-ஹைதாவை பாகிஸ்தானில் ஒழித்துவிட்டோம். அது பாகிஸ்தானில் இருந்துகொண்டு லண்டனிலோ, எகிப்திலோ, தொடர்குண்டு வெடிப்புகளை நிகழ்த்த முடியாது.


பின்லேடனுக்கு விசுவாசமான 700 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகளைப் பிடித்திருக்கிறோம். அல்ஹைதா ஒரு பயங்கரவாத இயக்கம் என்பது மாறி, அது ஒரு மனநிலை ஆகிவிட்டது. இயக்கத்தை ஒழிக்க முடியும். மனநிலையை இராணுவத்தால் மட்டும் தோற்கடிக்க முடியாது. அரசியல் மற்றும் சமூகப்பிரச்சினைகளுக்கு உலகம் விரைவில் தீர்வு காண வேண்டும் என்றார்.



**மும்பையில் கடும் மழையால் பெரும்பாலான இடங்கள் வெள்ளக் காடாகக்காட்சியளிக்கிறது. மும்பை ரயில் நிலையத்தில் தண்டவாளத்தின் மேலே தண்ணீர் செல்கிறது. இதேவேளை தண்டவாளத்தின் ஊடாக நடந்து செல்லும் பயணிகள்.**

## மும்பையில் கனமழை உயிரிழந்தோர் 300 ஆக உயர்வு

மகாராஷ்டிராவில் கடும் மழையால் 300 இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. மகாராஷ்டிராவில் கொங்கன் பகுதி மற்றும் இதர பகுதிகளில் இடைவிடாது மழை பெய்து வருகிறது. இந்தக் கனமழை காரணமாக ராய்காட் மாவட்டம் ஜுய் கிராமத்திலுள்ள மலைப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி 35 பேர் பலியானதாக ஆரம்பகட்ட செய்திகள் வெளியாகியுள்ளன. ஆயினும் இதில் 150இற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. மாவட்டத்தின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் புகுந்ததோடு, மும்பை- கோவா தேசிய நெடுஞ்சாலை எண் 17 உட்பட பல வீதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் இருந்து 1000இற்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.



**மும்பை மழையால் போக்குவரத்து நெரிசலில் சிக்கியுள்ள வாகனங்கள்.**

## நேபாள முன்னாள் பிரதமருக்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை

(காத்மண்டு)

நேபாள முன்னாள் பிரதமர் இலஞ்சம் வாங்கியதாகத் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும், ரூபா ஒன்பது கோடி அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

நேபாளப் பிரதமராக இருந்தவர் ஷேர்பகதூர் தாபா. இவரது ஆட்சியை மன்னர் ஞானேந்திரா கடந்த பெப்ரவரி மாதம் கலைத்ததுடன் அவசர நிலையைப் பிரகடனம் செய்தார்.

ஷேர்பகதூர்தாபா ஆட்சியில் இருந்த போது காத்மண்டு நகர குடிநீர்த்திட்டம் தனியாருக்கு ஒப்பந்தம் விடப்பட்டது. இந்தத் திட்டத்தை ஒப்பந்தம் எடுத்த நிறுவனத்திடம் இருந்து ரூபா.26 கோடி இலஞ்சம் வாங்கியதாக அப்போதைய பிரதமர் ஷேர்பகதூர் தாபா, அவரது அமைச்சராக இருந்த பிரகாஷ் மான்சிங் ஆகியோர் மீது இலஞ்ச ஒழிப்பு பொலிசார் வழக்குத் தொடர்ந்தார்கள்.

இந்த வழக்கில் முன்னாள் பிரதமர் ஷேர் பகதூர் தாபாவுக்கும், முன்னாள் அமைச்சர் பிரகாஷ் மான்சிங்கிற்கும் தலா இரண்டு ஆண்டு சிறைத் தண்டனையும், தலா ஒன்பது கோடி ரூபா அபராதமும் விதித்து இலஞ்ச ஒழிப்பு ராயல் கமிஷன் தலைவர் பக்தா பகதூர் கொய்தாலா தீர்ப்புக் கூறினார்.

தங்களது அரசியல் எதிரிகளை பழிவாங்கும் நடவடிக்கை இது என்று முன்னாள் பிரதமர்ஷேர் பகதூர்தாபா கூறினார்.



**குண்டுவெடிப்பையடுத்து மத்திய லண்டனில் ட்ரபல்கார் சதுக்கத்தில் நெல்சன் சிலைக்குப் பின்னால் பொருத்தப்பட்டுள்ள நவீன கண்டுபிடிப்பு கமரா.**

## டிஸ்கவரி விண்கலத்தில் உடைவு விஞ்ஞானிகள் மத்தியில் பதற்றம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனம் நாசா நேற்று முன்தினம் விண்ணில் செலுத்திய டிஸ்கவரி விண்கலத்திலிருந்து இரண்டு துண்டுகள் சிதறிவிழுந்திருப்பது விஞ்ஞானிகளிடையே இலேசான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இரண்டரை ஆண்டுகளுக்கு முன் கல்பனா உள்ளிட்ட ஏழு விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் பலியான கொலம்பியா விண்கலத்திற்கு ஏற்பட்டது போன்ற பிரச்சினை டிஸ்கவரி விண்கலத்திற்கு இப்போது ஏற்படுமோ என்ற சந்தேகத்தை இது ஏற்படுத்தியுள்ளது.







**கடந்த 21 ஆம் திகதி லண்டனில் தொடர்குண்டு வெடிப்புச்சம்பவம் நடைபெற்ற போதும் பர்மிங்காமில் அது தவறிப் போனது. இந்நிலையில் குண்டுதாரிகளைக் கண்டுபிடிக்க துப்பு ஏதும் கிடைக்குமா என அங்கு சோதனை நடத்தும் பொலிசார்.**

டிஸ்கவரி விண்கலம் நேற்று முன்தினம் இந்திய நேரப்படி 8.09 மணியளவில் விண்ணில் செலுத்தப்பட்டது. இது அடுத்த ஒன்பது நிமிடங்களுக்குள் அதன் சுற்றுப்பாதைக்கு சென்றுவிட்டது. இருப்பினும் டிஸ்கவரி விண்கலப் பயணம் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு 112 கமராக்கள் மற்றும் ராடர்கள் மூலம் பதிவு செய்யப்படுவதால் அவற்றின் ஒரு வீடியோக் காட்சியில் விண்கலத்திலிருந்து இரண்டு துண்டுகள் சிதறி விழுந்தது தெரிந்துள்ளது. இதனால் இந்த விண்கலம் பழுதடைந்துள்ளதா என்பதும் பழுது ஏற்பட்டால் அதனை விண்கலத்தில் பயணம் செய்வோர் சரி செய்ய முடியுமா என்பது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைதான் தெரியும் என்று நாசா பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## லண்டன் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டது இந்தியாவில் தயாரித்த வெடிகுண்டுகளே

(லண்டன்)

லண்டனில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் டப்பாக்களைப் பயன்படுத்தி வெடிகுண்டு தயாரித்துள்ள திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி லண்டனில் நான்கு இடங்களில் வெடிகுண்டுகள் வெடித்தன. அந்த இடங்களில் வெடிக்காத சில குண்டுகளையும் பொலிசார் கைப்பற்றி தீவிரசோதனை நடத்தினர். அதில், வெடிகுண்டுகளைத் தயாரிக்க இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் டப்பாக்களைத் தீவிரவாதிகள் பயன்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளது. வீட்டு உபயோகத்துக்கு பிளாஸ்டிக் டப்பாக்கள் பயன்படுத்தப்படுகின்றன. உள்ளே வைத்திருக்கும் பொருள் வெளியில் தெரியும் வகையில் விதம் விதமான டப்பாக்கள் நிறங்களில் தயாரிக்கப்படுகின்றன. அந்த டப்பாக்களைப் பயன்படுத்தி தான் தீவிரவாதிகள் வெடிகுண்டுகளைத் தயாரித்துள்ளனர் என்று லண்டன் பொலிசார் கண்டு பிடித்துள்ளனர்.

இது குறித்து லண்டன் உதவி பொலிஸ் கமிஷனர் பீட்டர் கிளார்க் நிருபர்களிடம் கூறியதாவது;

லண்டன் தாக்குதலுக்கு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெள்ளை நிற பிளாஸ்டிக் டப்பாக்களைப் பயன்படுத்தியிருக்கின்றனர். 'டெல்டா' 6250 என்று அழைக்கப்படும் அந்த டப்பாக்களைப் பற்றி விசாரணை நடத்தி வருகிறோம். லண்டன் கடைக்காரர்களிடம் இது தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. சந்தேகப்படும்படியோ அல்லது பொது மக்கள் யாராவது சமீபத்தில் ஐந்து அல்லது ஆறு வெள்ளை நிற டப்பாக்களை வாங்கிச் சென்றனரா என்பது குறித்து விசாரித்து வருகிறோம்.

மூடியுடன் உள்ள அந்த வெள்ளை டப்பாக்களை வாங்கிச் சென்றவர்கள் குறித்து ஏதாவது தகவல் தெரிந்தால், உடனடியாகப் பொலிசாருக்குத் தெரிவிக்கும்படி கடைக்காரர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் டப்பாக்கள் மீது ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கரில் பேழிலி டப்பாக்கள் சுப்பீரியர் குவாலிடி என்று அச்சிட்டப்பட்டுள்ளது. இந்த வகை டப்பாக்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. அங்கிருந்து நிறுவனம் ஒன்றின் வழியாக பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை பிரிட்டனில் 100 இற்கும் மேற்பட்ட கடைகளில் விற்கப்படுகின்றன. இவ்வாறு பீற்றர் கிளார்க் கூறினார்.

## ஈராக்கிற்கான இராஜதந்திர உறவை அல்ஜீரியா நிறுத்திக்கொண்டது

ஈராக்கிற்கான அல்ஜீரியாவின் சிறப்புத் தூதுவர் அலிபலோசியும் சகபணியாளரும் கடந்த வியாழக்கிழமை ஈராக்கில் வைத்து கடத்தப்பட்டதையடுத்து தமது இராஜதந்திர உறவுகளை விலக்கிக்கொள்ள அல் ஜீரியா முடிவு செய்துள்ளது.

இது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையென்றும், கடத்தல் காரர்களின் கோரிக்கைக்கு அடிபணிந்து எடுக்கப்பட்ட முடிவு அல்ல என வும் அல்ஜீரியாவின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட இருவரையும் விடுவிக்க தமது அரசு முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வடகொரியா அணுத்திட்டம் தொடர்பான ஆறு தரப்பு பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்

(பீஜிங்)

வடகொரியாவின் அணுத்திட்டம் தொடர்பாக பீஜிங்கில் இடம்பெற்று வரும் ஆறுதரப்புப் பேச்சுவார்த்தை நேற்று இரண்டாவது நாளை எட்டியிருந்தது.

இந்தப்பேச்சுவார்த்தையில் வோஷிங்டன் தரப்பிலும் வடகொரியா தரப்பிலும் சாதகமான முன்னேற்றங்கள் தென்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலம் தடைப்பட்டிருந்த வடகொரியா, தென்கொரியா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளுக்கிடையிலான நான்காவது சுற்றுப்பேச்சுவார்த்தைகள் சாதகமாக இருந்தாலும் சில விடயங்களில் தெளிவுகாண வேண்டியுள்ளது. எனத்தெரிவிக்கப்படுகிறது.

# சுற்றுச் சூழலை பாதுகாத்தல் தொடர்பாக பிரமந்தனாறில் விழிப்பூட்டல் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

**சுற்றுச்சூழலைப் பாதுகா‚தல் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு பிரமநதனாறு கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.**

கிராம மட்டத்தில் சுற்றாடல் குழுக் களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின்படி கிளிநொச்சி மாவட் டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்லாறு கிராமம், கண்டாவளை



(படம்-சசி)

உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதனால் இக் கிராமம் தெரிவு செய்யப்பட்டு விழிப் பூட்டல் நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பணிமனையும், கரைச்சி வடக்கு அபி விருத்தி நிறுவனமும் இணைந்து நடத்திய இவ்விழிப்பூட்டல் கருத் தரங்கானது கடந்த திங்கள் காலை 10.30 மணிக்கு பிரமந்தனாறு பொதுநோக்கு மண்டபத்தில் நடை பெற்றது.

தமிழீழத் தேசியக்கொடியேற்ற லுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் கருத்துரைகளை பிரதித்திட் டப்பணிப்பாளர் மு.தயாகுணரட்ண சிங்கமும், உதவி அரசாங்க அதிபர் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த வே.ஜெயராணியும் நிகழ்த்த, கிராம சுற்றாடல் குழுக்களின் பங்கு குறித்த கருத்துரைகளை கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பணிமனை யின் நிர்வாக உத்தியோகத்தர் பத்மநாதன் நிகழ்த்தினார். சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காக வீதியோர மரநடுகைத்திட்டம், மழைநீர் கால்வாய் களின் பராமரிப்பு, மண்பாதுகாப்பு, குடிநீர்வளப்பாதுகாப்பு, திண்மக்கழிவு களைக் குறைத்தல், இயற்கை அனர்த்தங்களிலிருந்து கரையோரங் களைப் பாதுகாக்க கரையோர மர நடுகை, கல்வேலிகள் அமைத்தல், முருகைகற்பாறைகளின் பாதுகாப்பு போன்ற செயற்றிட்டங்களை மேற்க் கொள்வதற்கான கருத்துக்களும் மக்களிற்கு வலியுறுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் கிராமசேவையாளர் கள் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச,அரசசார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண் டனர். (ச)

# சமாதான அபிவிருத்தி நிகழ்வு

(வவுனியா)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வவுனியா தெற்குவலய முன்பள்ளி மேம்பாட்டு நிலையம் மூவின மக்களையும் ஒன்றிணைத்து நடைமுறைப் படுத்தும் சமாதான அபிவிருத்திச் செயற்பாட்டின் மூன்றாம் கட்ட முதல் நாள் நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை ஈரப்பெரியகுளத்திலுள்ள மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றுள்ளது. முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசபாதம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில். தமிழ்ப்பிரிவில் தோணிக் கல் சிவாலய, முன்பள்ளி, பூந்தோட்டம் கலைமகள் முன்பள்ளிகளும், முஸ்லிம் பிரிவில் பட்டக்காடு, பட்டனிச்சூர் முன்பள்ளிகள், சிங்களப்பிரிவில் ஈரப் பெரியகுளம் முன்பள்ளி, கழுக்குண்டாமடு முன்பள்ளி ஆகிய முன்பள்ளி களும் கலந்து கொண்டதோடு நிகழ்வில் பௌத்தகுருமார், சிங்களப்பிரிவில் உதவிக்கல்விப்பணிப்பாளர், அதிபர், சிறுவர்களின் இணைப்பதிகாரி, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுநிலையத்தின் வலய இணைப்பாளர், கூட்ட மைப்புப் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், தமிழ்,சிங்கள, முஸ்லிம் பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மூவினச் சிறுவர்களினது சமாதானத்தை வலியுறுத்தும் கவிதை, பேச்சு, பாடல், ஆடல், உடல் இசைவும், அசைவும் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# இலுப்பைக்கடவையில் நம்பிக்கையூட்டும் திட்டம்

(மன்னார்)

மன்னார் இலுப்பைக் கடவையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் "நம்பிக்கையூட்டும் திட்டம்" ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ். சிவகரன் தலைமையில் ஆரம்பமாகிய இந் நிகழ்விற்கு 'கார்ப்' சமூக அபிவிருத் தித்திட்டம் அனுசரணை வழங்கியது.

கிராமங்களை அபிவிருத்தி செய் வதுடன் மக்களிடையே முன்னேற்றத் தையும், விழிப்புணர்வையும் தோற்று விக்கின்ற முனைப்புடன் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினால் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் பொதுச் சுடரேற்றப்பட்டதைத் தொடர் ந்து தேசியக்கொடியும் தமிழர்புனர் வாழ்வுக் கொடியும், ஏற்றப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் கலந்து கொண்டார்.

நம்பிக்கையூட்டும் திட்டத்தின் ஆரம்ப நாளில் கிராம மக்களின் அத் [illegible]ாவசியத் தேவையாக விளங்கும் [illegible] வழங்குவதற்காக நான்கு [illegible]ா பெறுமதியில் நீர்த் தாங்கியை நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. தொடர்ந்து இடம் பெற்ற மண்டப நிகழ்வில் தலைமை யுரை, சிறப்புரைகள் இடம்பெற்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழக சமுதாய மீள்கட்டமைப்புத் திட்ட இணைப்பாளர் . சு. லோகநாதன் தனது கருத்துரை யில்; இத்திட்டத்தின் அவசியத்தை யும், முக்கியத்துவத்தையும் விளக் கிக் கூறினார். தமிழர் புனர் வாழ்வுக் கழக மன்னார் மாவட்டப் பணிப்பாளர் கேசவன் தனதுரையில்: இத்திட்டம் வெற்றிபெற மக்கள் பங்களிப்பு இன்றி யமையாதது எனக் கூறினார்.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு நிர்வாக அலுவலர் எஸ்.அலோசியஸ், மன்னார் மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் றீகன், கிராம அபிவிருத்தி அலுவலர் சாந்தகுமார், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறியியலாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கைலாச பிள்ளை, வடக்குக்கிழக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர், இலுப்பைக்கடவைப் பாடசாலை அதி பர் உட்பட அரசஅலுவலர்கள், போரா ளிகள், பொதுமக்கள் எனப் பெருமள வானோர் கலந்துகொண்டனர்.

# தட்டுவன்கொட்டி கிராமத்தில் கல்வி வளர்ச்சி தொடர்பான கலந்துரையாடல்

ஆனையிறவு தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் ஜேர்மன் சமஷ்டிக் குடி யரசின் பொருளாதார ஒத்துழைப்பிற்கும், அபிவிருத்திக்குமான அமைச்சின் நிதிப்பங்களிப்பில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தால் 110 வீடுகளைக்கொண்ட குடியிருப்பு அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பில் அமையப்பெற்றுள்ளபொதுநோக்கு மண்டபத்தில் சிறுவர்களின் கல்விவளர்ச்சியைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாக முன் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு அதற்கான நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டு, முன்பள் ளிச் செயற்பாடுகள், போஷாக்கு போன்ற விடயங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் கலந்தாலோசிக்கப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஒன்று முதல் ஐந்தாம் ஆண்டு வரையான மாணவர்களுக்கான மாலை நேரக் கல்வி நடாத்துவதற்கும் தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கு போசாக்குணவு வழங்குவதற்கான பொருட்கள், முன்பள்ளிக்கான கற்றல் உபகரணப் பொருட்கள் போன்றவற்றைச் சர்வோதய நிறுவனம் வழங்கி, போஷாக்குணவினையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. மற்றும் முன்பள்ளிக்குத் தேவையான பாய், வாளி, கற்றல் உபகரணங்கள், பதிவேடுகள், மாணவர்களுக்கான சீருடைகளையும் தமிழர்புனர்வாழ்வுக் கழகமும், முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையமும், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனமும் வழங்கியுள்ளன. இக்கலந்துரையாடலில் கிராம சேவையாளர், கிராமஅபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர், முன்பள்ளி ஆசிரி யர்கள், கண்டாவளைப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழ[illegible] கண்டாவளைப் பிரதேச உதவிப்பணிப்பாளர், தமிழர்புனர் வாழ்வுக் கழக ம[illegible]வட்டப் பணிப்பாளர் போன்றோர் கலந்துகொண்டு கருத்துரை கள் வழங்கினார்கள்.

# கணினி சாரதி அனுமதிப்பத்திரத்தை உரிமையாளர்கள் பெற்றுக்கொள்க

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத் தில் நடைபெற்ற வாகன போக்கு வரத்து திணைக்களத்தினரின் நட மாடும் செயலகத்தில் பழைய சாரதி அனுமதிப்பத்திரங்களை புதிய கணினி அனுமதிப்பத்திரமாக மாற்று வதற்கு விண்ணப்பித்த 21 பேரினதும் கணினி சாரதி அனுமதிப்பத்திரம் கிளிநொச்சி மாவட்ட செயலக மோட் டார் போக்குவரத்து கிளைக்கு வந்து சேர்ந்துள்ளது.

அத்துடன் மேற்படி சேவையின் போது ஆவணங்கள் தவறவிடப்பட்ட உந்துருளிகளின் பதிவுகளை மேற் கொண்டு 502- இலக்கம் வழங்கப் பட்ட உந்துருளி உரிமையாளர்களு டைய உரிமைப்பத்திரங்களும் கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் உரி மையாளர்கள் அலுவலக நேரத்தில் சமுகம் கொடுத்து மேற்படி ஆவணங் களைப் பெற்றுச் செல்லும் வண்ணம் கிளி.மாவட்ட செயலகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

# திருக்குறள் தமிழ் இலக்கியத்திறன் தேர்வு முடிவும் மாவட்ட மட்டத்தில் பரிசிலும், சான்றிதழும் பெறுவோர்

**நேற்றைய தொடர்ச்சி**

பிரிவு "இ"

01.செல்வி.யெ.செசிலியா மேபிள்- கிளி/மத்திய கல்லூரி, செல்வி ம. அபிராமி- கிளி.மத்திய கல்லூரி, செல்வி.த.தர்சா- கிளி/மத்திய கல்லூரி, செல்வி ம.மோகனா இராமநாதபுரம் மேற்கு அ.த.க., செல்வி.பா.லாவனியா-இராமநாதபுரம் மேற்கு அ.த.க., செல்வி யெ.யசோ தினி -இராமநாதபுரம் மேற்கு அ.த.க., செல்வி.த.யானுகா- இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, செல்வி ச. அர்ச்சனா-இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, செல்வி சி.திர்சாந்தினி -கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வன் ஆ. அனுசாந்- கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வி ம. சானுயா- கிளி/இந்துக்கல்லூரி, செல்வி தி.சிறிரயீவினி கிளி/ இந்துக்கல்லூரி, செல்வி பூ.தட்சா யினி- திருவையாறு உ.நி.ப, செல்வி ச.தமிழேந்தி-திருவையாறு உ.நி.ப.

பிரிவு "ஈ"

செல்வன் பு.தர்சன்-இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, செல்வி.செ.கோபிகா- இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, செல்வி. த.திலக்சி-இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, செல்வி ந.சரண்யா-இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, செல்வி த.விஜய பாரதி- கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வி த. கார்த்திகா-கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வன் ச.பானுப் பிரியன்-கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வி ஆ.மதுராங்கி-கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வி.இ.தர்சினி- கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வி. சு.சுயீபா-கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வி. அ.தர்சனா-கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வன். ய.கரிராம்- இராமநாதபுரம் மேற்கு அ.த.க., செல்வி சி.தாரணி-கனகபுரம் உ.நி.பள்ளி, செல்வி ஆ.றயீதா- கிளி/மத்தியகல்லூரி,செல்வி. மோ.கயேந்தினி - புதுமுறிப்பு விக்கினேஸ்வரா பள்ளி, செல்வி. சி.இன்பமதி- கிளி/மத்திய கல்லூரி.

பிரிவு "உ"

செல்வன் போ.நிசாந்தன் -பளை மத்தியகல்லூரி, செல்வி அ.றமனா- பளை றோ.க.த.க.பள்ளி,செல்வி உ.நிர்மலா- செயபுரம் அ.த.க.பள்ளி, செல்வி.நி.கீர்த்தனா- செயபுரம் அ.த.க.பள்ளி, கா.டெல்சிகா- செய புரம் அ.த.க.பள்ளி, [illegible]ல்வன் செ. தினேசுவரன்- செயபுரம் அ.த.க. பள்ளி, செல்வன். யோ.ந[illegible] - தரும புரம் உ.நி.பள்ளி, செல்வன் சூ.கோபிகிருச்சனா-தருமபுரம் எண் 1. அ.த.க.பள்ளி,செல்வன் இ.யனத்- கிளிநொச்சி உ.நி.பள்ளி, செல்வன் இ.விதுர்சன்- உருத்திரபுரம் உ.நி. பள்ளி, செல்வி.நி.குகாயினி-உருத்திர புரம் உ.நி.பள்ளி, செல்வி சி.சயீபா- சிவநகர் அ.த.க.பள்ளி, செல்வி. த.அனோயா- சிவநகர் அ.த.க.பள்ளி, செல்வி பா.சிந்துசா- இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி, செல்வன் சு.விபீசன்-இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி, செல்வி.த.சிறாத்திகா- இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பள்ளி, செல்வி.வி.விபூசனா-இராமநாதபுரம் மேற்கு.அ.த.க பள்ளி, செல்வி. வி.நிதர்சனா இராமநாதபுரம் மேற்கு அ.த.க பள்ளி. செல்வன் சி.கிருத்திகன்- இராமநாதபுரம் மேற்கு. அ.த.க பள்ளி, செல்வன்.ந.மிதுர்சன்- இராமநாதபுரம் மேற்கு.அ.த.க பள்ளி, செல்வன் பு.பிரதாபன்-இராமநாதபுரம் மேற்கு.அ.த.க பள்ளி, செல்வி. இ.யசிந்தா-இராமநாதபுரம் மேற்கு.அ.த.க பள்ளி, செல்வி. செ.பானுமதி-இராமநாதபுரம் மேற்கு. அ.த.க பள்ளி, செல்வி.சி.லக்சனா- இராமநாதபுரம் மேற்கு.அ.த.க பள்ளி, செல்வன்.ம.பிரசாந்-இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.ப, செல்வி த.அனோயா-இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.ப, செல்வி.பகிர்தா-இராம நாதபுரம் கிழக்கு அ.த.க.ப, செல்வி க.அனுசியா-பாரதிபுரம் பள்ளி, செல்வி மு.டுகிர்தா-பாரதிபுரம் பள்ளி, செல்வி ச.டினோசா-திரு[illegible]யாறு உயர்நிலைப் பள்ளி, செல்வன் ந.துவாரகன்-திருவையாறு உயர் நிலைப் பள்ளி, செல்வி சி.லக்சனா- திருவையாறு உயர்நிலைப் பள்ளி, செல்வன்ப.லதுசன்-திருவையாறு உயர்நிலைப்பள்ளி, செல்வன் க.அஞ்சலன் -திருவையாறு உயர் நிலைப்பள்ளி, செல்வன் சி.உதய வர்மன் -திருவையாறு உயர்நிலைப் பள்ளி, செல்வி இ.துசயந்தினி- திருவையாறு உயர்நிலைப் பள்ளி, செல்வன் க.மகரந்தன் -புனிததிரேசா பெண்கள் கல்லூரி, செல்வி சி.யாருனா-புனிததிரேசா பெண்கள் கல்லூரி, செல்வி.தெ.பவிசாயினி- புனிததிரேசா பெண்கள் கல்லூரி, செல்வி இ.கயீதா-புனிததிரேசா பெண்கள் கல்லூரி, செல்வன் யோ.விதுர்சன்-கிளி/மத்தியகல்லூரி, செல்வி.மு.கயல்விழி-கிளி/ மத்தியகல்லூரி,செல்வி ம.சோபிகா- கிளி/மத்தியகல்லூரி, செல்வன் கு.ரியர்சன்-கிளி/மத்திய கல்லூரி,

# போர் வரலாம் என்ற எதிர்பார்க்கையின் பின்னால் மண் அகழ்வு, பனை மரம் தறிப்பு அதிகரிப்பு

(தென்மராட்சி)

**போர் வரலாம் என்ற நிலைப்பாடு தோன்றியதற்குப் பின்னால் தென்மராட்சி பிரதேசத்தில் சட்ட விரோத மண் அகழ்வும் விற்பனை நோக்கோடு பனை மரங்கள் தறிப்பதும் அதிகரித்து இருப்பதாக தென்மராட்சி சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.**

கடந்த காலங்களில் இரவு வேளைகளில் கடத்தி வரப்பட்டு வந்த மணல் தற்பொழுது பகலிலேயே பிரதான சாலையூடாகக் கொண்டு செல்லப்படுவதாகவும், பனை மரங்கள் தறிப்பதும் கடந்த காலங்களைக் காட்டிலும் தற்பொழுது அதிகரித்து இருப்பதாகவும் இவ் அமைப்பு தெரிவித்திருப்பதுடன் கடந்த காலங்களில் இது தொடர்பாக வழங்கப்பட்ட எச்சரிக்கைகளை மீறி செயற்படுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க இருப்பதாக சூழல் பாதுகாப்பு அமைப்புத் தெரிவித்துள்ளது. (28)

# முகமாலையில் சிறுவன் தடுப்பு; மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

(தென்மராட்சி)

முகமாலையில் படையினரால் சிறுவன் தடுத்து வைக்கப்பட்டதன் முறைப்பாடு தொடர்பாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை நடத்தியுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி வன்னியில் உள்ள உறவினரைப் பார்க்கச் சென்ற கருணாகரன் சசிகரன் என்பவரை முகமாலை சோதனைச் சாவடியில் படையினர் தடுத்து வைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு முகமாலை சோதன்ன நிலைய இராணுவ அதிகாரிகளிடம் விசாரணை நடத்தியுள்ளது.

இந்த விசாரணையில் சிறுவன் தொடர்பாக படையினர் தமக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (28)

# யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரியை விசாரணைக்கு வருமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா பொலிஸ் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரியை விசாரணைக்கு வருமாறு யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி றோஹித பிரிய தர்சன அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சிறிலங்கா பொலிஸ் நிலையத்தில் பொது மக்கள் சுதந்திரமாக தங்களது வாக்கு மூலங்களை அளிக்க முடியாத நிலைமை உள்ளதாகவும், யாழ். பொலிஸ் நிலையத்திற்குள் வைத்தே சம்பந்தப்பட்டோர், தங்களுக்குள் தர்க்கப்பட்டு தாக்குதல் நடத்துகின்ற அளவுக்கு நிலைமைகள் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பான முறைப்பாடு ஒன்று மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு கிடைத்ததையடுத்தே மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி யாழ். பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியை விசாரணைக்கு அழைத்துள்ளார்.

# கறுப்புத் துணியால் முகத்தை மறைத்தபடி இரவில் படையினர் நடமாட்டம்

(தென்மராட்சி)

கொடிகாமம், மீசாலை கைதடிப் பகுதிகளில் கறுப்புத் துணியால் முகத்தை மறைத்தபடி ஆயுதங்களுடன் இரவில் வீதிகளில் படையினர் நடமாடுவது குறித்து பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

வீட்டுவளவுகளுக்குள்ளும், மதில்கள், வேலிகளுக்கு அருகிலும், இரவில் படையினர் பதுங்கியிருந்து வீடுகளைக் கண்காணித்து வருவதாகவும் இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வருவதற்கு அச்சமடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களிடையே பீதியை உருவாக்கவே படையினர் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. (28)

# நாவற்குழி 300 வீட்டுத்திட்ட அபிவிருத்தி குறித்து விசேட கூட்டம்

(நாவற்குழி)

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக விசேட கூட்டம் ஒன்று நடாத்தப்படவுள்ளது.

கடந்த 40 மாத காலமாக நடைபெற்று வருகின்ற சமாதான காலப்பகுதிக்குள் எந்த வித அபிவிருத்திப் பணிகளும் நடைபெறாமல் இருக்கின்ற நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக இக் கூட்டம் நடாத்தப்படவுள்ளது.

நாவற்குழி 300 வீட்டுத் திட்ட அபிவிருத்திக் குழு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சாலை, மின்சார வசதிகளோ மலசல கூட வசதிகளோ செய்யப்படாததுடன் போரினால் உடைந்து போன வீடுகள் முன் பள்ளிகள் என்பன இதுவரை காலமும் புனரமைக்கப்படவில்லை.

இவற்றை எப்படி புனர் நிர்மாண செய்வது என்பது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், பிரதேச சபை செயலாளர், அரச சார்பற்ற பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், தேசிய எழுச்சிப் பேரவை, யாழ். மாவட்ட அரசியல் துறை கோட்ட அரசியல் துறை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை அழைத்து இக் கூட்டத்தில் ஆலோசனைகள் பெறப்பட இருப்பபதாக இதன் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (28)

# தென்மராட்சியில் புதிய பிரதேச செயலகம்: நடவடிக்கைகள் மேலும் தீவிரம்

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கிற்கென தனியான பிரதேச செயலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவீரமடைந்துள்ளன.

இருபத்தியெட்டு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி கிழக்கிற்கென தனியான பிரதேச செயலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது தீவிரம் பெற்றிருப்பதாகவும், அதற்குரிய அனுசரணையை பாராளுமன்றம் மூலம் பிரயோகிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை பிரதேச செயலகம் அமைப்பதற்கான செயலணிக்குழு எடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

எதிர்வரும் ஆண்டுக்குள் தென்மராட்சி கிழக்கிற்கென தனியானதொரு நிர்வாக வசதிகளுடன் கூடிய பிரதேச செயலகம் அமைப்பதற்கான உறுதிமொழிகள் சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் இருந்து வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (28)

# யாழ்.தொழில் திணைக்களத்தில் வெளிக்கள உத்தியோகத்தர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொழில் திணைக்களத்தில்கடமையாற்றுவதற்கு வெளிக்கள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை நிலவுவதாக யாழ். மாவட்ட தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கனகேஸ்வரன் கூறினார்.

அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற தொழில் ஸ்தாபனங்களின் எண்ணிக்கைகளுடன் ஒப்பிடும்போது குறைந்தது பத்து வெளிக்கள உத்தியோகத்தர்களாவது கடமையாற்ற வேண்டிய அவசிய நிலை உள்ளது.

எனினும் யாழ். மாவட்டத்தில் தற்பொழுது ஒரேயொரு வெளிக்கள உத்தியோகத்தர் மட்டுமே தொழில் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றி வருகிறார்.

இதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் உள்ள தொழில் ஸ்தாபனங்களில் நிலவுகின்ற உரிமை மீறல்கள், தொழில் சட்ட மீறல்கள் என்பவற்றை அவதானித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலையுள்ளது.

இதனால் தொழில் திணைக்கள செயற்பாடுகள் பெரும் பாதிப்படைந்துள்ளன என அவர் மேலும் கூறினார். (33)

# ஆசிரிய வாண்மை போட்டியில் அதி விசேட சித்தி பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி கடந்த 21 ஆம் திகதி யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுடைய வாண்மையை உயர்த்துவது தொடர்பாக போட்டியை நடத்தியது.

அதில் அதிவிசேட சித்திகளைப் பெற்றோரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முதன்மை நிலை-01

திருமதி சு.துரைசிங்கம் யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்.

திருமதி இ-நவரத்தினராசா யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்,

திருமதி தி. டொனா அல்பிறட் யா/ ஜோன் பொஸ்கோ வித்தியாலயம.

முதன்மை நிலை 02

திரு. ஞா- அன்ரன் பிறேமதாஸ் யா/ உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம். திருமதி. பா- போல் கமல்ராஜ் யா/ உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம். திருமதி ந- தயாளஜெயன் யா/ கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம்.

முதன்மை நிலை 03

திருமதி இ. லோகேஸ்வரன் யா/ கரந்தன் ராமுப்பிள்ளை வித்தியாலயம். திருமதி ம. உதயராசா யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம், செல்வி ம.மீனலோசனி யா/ உயரப்புலம் மெ.மி.த.க பாடசாலை

**கணினி**

திரு.த- தயாபரன் -யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, திருமதி உ.சிவபுத்திரன் யா/ மத்திய கல்லூரி,

திருமதி சி. கணேசநாதன் யா/ மத்திய கல்லூரி.

# சுனாமியால் காணாமல் போனோரை இறந்தவர்களாகப் பதிவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சுனாமி அனர்த்தத்தினால் காணாமல் போனோரை இறந்தவர்களாகப் பதிவு செய்து அவர்களுக்குரிய மரண அத்தாட்சிச் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சுனாமி அனர்த்தத்தின் போது காணாமல் போனோரின் பெற்றோர் அல்லது உரித்துடையோர் தத்தமது கிராம சேவை அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் காணாமல் போன தம் உறவுகளின் பெயர் விபரங்களைப் பதிவு செய்யுமாறு பதிவாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாறான பதிவுகளின் அடிப்படையில் சுனாமியால் காணாமல் போனவர்கள் இறந்து விட்டதாகப் பதிவு செய்து அதற்குரிய மரணச் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்தச் சான்றிதழின் பதிவுகளின் அடிப்படையில் காணாமல் போனவர்களும் இறந்து விட்டதாக கருதப்படுவதால் உயிரிழப்பை சந்தித்தவர்களுக்கென வழங்கப்படும். உதவிகள், நிவாரணங்கள் காணாமல் போனோரது குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக அறவிக்கப்பட்டுள்ளது (33)

# தனிச்சிங்களத்தில் பொலிசாரின் குற்றப்பண அறவீட்டுப்பத்திரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சிறிலங்கா போக்குவரத்து பொலிசாரினால் வீதிப போக்குவரத்து விதிமுறைகளை மீறும்சாரதிகளுக்கு வழங்கப்படும் குற்றப் பண அறவீட்டுப் பத்திரங்கள் தனிச் சிங்கள மொழியில் அமைந்திருப்பதால் வாகன உரிமையாளர்கள் அவற்றை வாசித்து அதிலுள்ள விடயங்களை அறிந்து கொள்ள முடியாத அவல நிலை உள்ளது.

இதனால் பொலிசாரின் அறிவுறுத்தலின் படி குற்றப் பணத்தை செலுத்துவதற்கு தபாலகங்களுக்குச் செல்லும் போது தபாலக ஊழியர்களும் தனிச் சிங்களத்தில் அமைந்த இந்தப் பத்திரங்களை வாசித்து அறிந்து கொள்ள முடியாது பெரும் சிரமப்படுகின்றனர்.

இது குறித்து வாகன உரிமையாளர்கள், சாரதிகள் தபாலக அதிகாரிகள் போன்றோரால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (33)

# சிறிலங்காவின் எதிர்கால அரசியல் குறித்து தீர்மானம் எடுப்பவர்கள் யார்?

**இலங்கைஅரசின்** அரசியல் யாப்பு சட்டம் சிக்கலான இழு பறி நிலையிலுள்ளது. ஒவ்வொரு நாளும் நாட்டில் ஏற்படும் பலதரப்பட்ட பிரச் சினைகளினால் நாட்டின் அரசியல் பிரிந்த நூல் பந்துக்குச் சமமாக இழு பட்டவண்ணம் உள்ளபடியால் நாட்டி லுள்ள மக்கள் சமூகம் தற்பொழுது வியப்புடன் பார்த்த வண்ணமுள்ளது. ஒவ்வொரு நாளும் அரசியல் பிரச் சினைகள் முளை விட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. சிறு பான்மை அரசு நாட்டில் ஆட்சி



ஆலோசனைபெறத்தவறியமை,இக் கூட்டு ஒப்பந்தம் ஆரம்பிக்கும் முன்ன தாக உயர்நீதிமன்றத்தின் கருத்துக்களைப் பெறாமல் தன்னிச் சையாக செயற்பட்டமை, இவற்றை ஆரம்பத்தில் இருந்து செயற் படுத்தத்தவறியமை போன்றவற்றை ஆரம்பம் தொட்டு ஜே.வி.பி எதிர்த்து வந்தது. இவற்றின் மத்தியில் சனாதிபதி அவர்கள் சனாதிபதித் தேர்தல் நடக்கும் நாட்களை அறிவித்திருப் பாரானால் இப் பிரச்சினை நீதிமன்றம் வரை போயிருக்காது. கட்சியில் இருந்து கொண்டு அக்கட்சிக்கு எதிராக செயற்பட முடியாதென்பதை உணர்ந்த ஜே.வி.பி கட்சியை விட்டு விலகி சுனாமி கூட்டு ஒப்பந்தத்திற்கு எதிராக செயற் பட்டதும் அல்லாமல் இதற்குஎதிராக உயர் நீதிமன்றத்திலும் வழக்கினைத் தாக் கல் செய்தது.

ஜே.வி.பி அரசாங் கத்தில் இருந்து வில கியபின் சுனாமி கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்தானது. இதனால் சனாதிபதி நாட்டின் சிறந்த தலைவி ஆனதுடன் சர்வதேச அரங்கில்

நிதியை இலங்கை அரசுக்கு ஜப்பான் வழங்குகின்றது. 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை குறைந்த வட்டிக்கு வழங்கியுள்ளது. இந்த நிதியை சுனாமி கூட்டு நிதிக்கு வைப்புச் செய்தால் பலபிரச்சி னைகள் ஏற்படும் என்பதால் சனாதிபதி மத்தியவங்கியில் வைப்பீடு செய்த துடன் சுனாமி நிதிக்கு இதை வைப்பீடு செய்ய முடியாதெனக் கூறி யுள்ளார்.இதனால் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ,கனடா போன்ற நாடுகளின் நிதி உதவி சுனாமி கூட்டு சபைக்கு வழங்குவதில் சிக்கல் ஏற்படுகின்றபடியால் சிலவேளை அந் நிதிகளும் சுனாமி கூட்டு சபைக்கு வழங்குவதும் நிறுத்தப்படலாம்.

சுனாமி கூட்டு ஒப்பந்தத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த அதே வெளிநாடுகள் இப்பொழுது சுனாமி கூட்டு ஒப்பந்தத்திற்கு வழங்கும் நிதியைக் கூட கொடுப்பதற்கு மறுப்பு தெரிவிக்கின்றமையால் சிக்கலான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தனிப் பட்ட முறையில் சனாதிபதியின் மேல் இக்குற்றத்தை சுமத்த முடியாது, சர்வதேச நாடுகளில் இக்குற்றத்தினை சுமத்தவும் முடியாது.

சுனாமி புனரமைப்புக்கு வழங்கப் படும் நிதியை 70 சதவிகிதம் அரச நிதிக்கும் 30 சதவீகிதம் சுனாமி நிவாரண நிதிக்கு வழங்கப்போவதாக வெளிநாட்டு உயர்ஸ்தானிகர் காரியா லயங்கள் ஊடாகத் தெரிய வந்துள்ளது. ஆகவே இச் செயல்

துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்கள் வன்னிக்கு வரவழைத்து சுனாமி கூட்டு ஒப்பந்தம் பற்றிய எண்ணங்களை நாங்கள் கைவிட்டு விட்டோம் என அவர்களுக்கு கூறியுள்ளார். வடக்கு கிழக்கில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச தொடர்பு இல்லாமல் நேரடியாக சர்வதேச உதவிவழங்கும் நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெறுவதே இவர்களின் நோக்கம் என இந்த அறிவிப்பு தெளிவு படுத்துகின்றது. ஆனால் சமீபத்தில் லண்டனில் நடந்த குண்டுவெடிப்பின் காரணமாக இந்த நிதி வழங்குதலில் தாமதம் ஏற் படலாம் என்பது எனது கருத்தாகும்.

அடுத்தாக எதிர்வரும் தேர்தல் எப்படி நடக்கப்போகின்றதென்று மக்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு வெளியேறிய பின் இப்பொழுது அரசாங்கம் சிறுபான்மை என்றபடியால் தேர்தலை பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்க் கின்றனர். இது சனாதிபதித் தேர்த லாக இருக்க வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர் பார்ப்பாகும். சரித்திரம் காணாதமக்கள் கூட்டத்தை ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பில் கூட்டி சனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நடக்க வேண்டும் என்று கோரிவருகின்றது அப்பொழுது கூட்டத்தில் கலந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க மக்களிடம்

பல காரணங்களும் உள்ளன. அரசின் பல சிரேஷ்ட அமைச் சர்களும் சபை முதல்வர் மைத்திரி பால சிறிசேனவும் அரசியல் யாப்பு சட்டங்களை அமுல் படுத்தும் அதிகாரம் உயர்நீதிமன்றத் தீர்ப்பிலேயே தங்கியுள்ளதெனக் கூறி வருகின்றார்கள். எதிர்கட்சியினர் இவ் வருட இறுதியில் சனாதிபதி தேர்தல் நடத்தவேண்டும் என மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்து வார்களானால் சனாதிபதி அரசை கலைத்துவிட்டு பொதுத்தேர்தலை நடத்தும் கட்டத்திற்கு தள்ளப்படுவார். இது தவிர்க்க முடியாதது. ஏனெனில் சமீபத்தில் பாராளுமன்றமே அரசாங்கம் என்று ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியுள்ளார். தற்பொழுது அரசாங்கம் இவ்வருட வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்த வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்பின் பொழுது தோல்வி கண்டால் பாராளு மன்றம் கலைக்கப்படலாம். ஆகவே எதிர்வரும் வரவுசெலவு திட்டம் அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் முக்கி யத்துவமான தொன்றாகும். எது எப்படி இருந்தாலும் ஜே.வி.பி அரசாங் கத்தில் இருந்து விலகினாலும் கடந்த சில வாரங்களில் பல மசோதாக்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டன. தற்போதைய நாட்டின் நிலை மையை எடுத்துக்கொண்டால் எதிர் கால அரசியலை நடத்துபவர்கள் யார்? என்ற கேள்வி எழும்பியுள்ளது. ஒவ்வொரு கட்சியினருக்கும் யாப்பு உண்டு. அந்தயாப்பு விதி களின்படி சில கட்சிகள் அரசுக்கு எதிரான பல போராட்டங்களை நடத்து கின்றது. சனாதிபதி சந்திரிகா அம்மையார், எதிர்க்கட்சித் தலைவர்

செய்யும் பொழுது அதன் ஆயுட் காலம் எவ்வளவு? எத்தனை காலம் நீடிக்கும்? இரண்டாவது அரசின் சுனாமி கூட்டு ஒப்பந்தத்தை எப்படி அமுல்படுத்துவது? மூன் றாவது கிழக்கில் பாதுகாப்பு மிக மோசமடைந்த வண்ணமுள்ளது. இந்தப்பிரச்சினைகள் மத்தியில் தற்பொழுது பொதுத்தேர்தலா? அல்லது சனாதிபதித் தேர்தலா? இவை இரண்டிற்கும் விடைகாண்பது மிகச் சிக்கலாகவுள்ளது.

2004 ஆம் ஆண்டு சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி சுனாமி கூட்டு ஒப் பந்தத்தினால் ஏற்பட்ட அரசியல் கருத்து வேறுபாடுகளினால் இரண் டாகப் பிளவுபட்டுள்ளது. இக் கூட்டு ஒப்பந்தத்தில் எந்தக் குறைபாடுகளும் இல்லை என்பதே அரசியல் அவதா னிகளின் கருத்தாகும். ஆனால் சுனாமி கூட்டு ஒப்பந்தத்தைப் பற்றி நாட்டு மக்களுக்கு அதன் முழு விபரங் களையும் அறிவிக்காதமை, பொது வாக இது சம்பந்தமாக ஏனைய கட்சிகளோடு கலந்தாலோசித்து

நன்மதிப்பையும் வென்றுள்ளார். இதனால் சந்தி ரிகாவின் பெயரும் நோபல் பரிசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. சுனாமி கூட்டு ஒப்பந்தத்தை நிச்சயமாக அமுல்படுத்த வேண்டுமென அமெரிக்கா கூறியுள்ளதுடன் விடுதலைப்புலிகள் அங்கம் வகிக்கும் எந்த ஒரு கூட்டு ஒப்பந்தத்திற்கும் அமெரிக்க சட்டத்தின் படி நிதி வழங்க முடியாதென அறிவித்துள்ளது. இது சம்பந்தமாக அமெரிக்க அரச திணைக்களங்களுக்கும் நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் நீதிபதிக்கும் அறிவுரைகளை வழங்கியுள்ளது. அமெரிக்க அரசால் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு சட்டப்படி நிதி வழங்க முடியாதென குறிப்பிட்டுள்ளது. இதேபோல் ஜப்பான் வடக்கு கிழக்கு புனர்நிர்மாண அபிவிருத்தி நிதிக்கு முதலீடு செய்வதையும் நிறுத்தி யுள்ளதுடன் சுனாமி நிதியை நேரடியாக அரச மத்திய வங்கிக்கு அனுப்புவதென தெரிவித்துள்ளது.

வருடமொன்றுக்கு அதிக களினால் அரசியல் பிரச்சினைகள் மேலும் சிக்கலடைந்துள்ளன. உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பும் சுனாமிகட்டமைப்புக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அரச கட்டுப்பாட்டின் கீழ் சுனாமி நிவா ரண நிதி வழங்கப்படவேண்டும் என உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பும், மேலும் சிறு திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென நீதிமன்றம் தீர்பளித்துள்ளதும் சிக்கலை உரு வாக்கியுள்ளது.

இத்தீர்ப்பினால் சுனாமி கூட்டு ஒப் பந்தம் புதிய வடிவம் பெற்றுள்ளது. இடைக்காலத் தீர்ப்பை நடை முறைப் படுத்தும்பொழுது சுனாமி கூட்டு நடவடிக்கை அமுல்படுத்துவதெப்படி? என்று எம்மால் கூற முடியாது. இதற்கிடையில் சுனாமி நிவாரண தேசிய சபையின் அரச பிரதிநிதியாக அமைச்சர் டி யு குணசேகர நியமிக்கப் பட்டுள்ளார். இதுவரை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைப்பற்றி அவர்கள் எதுவும்கூறவில்லை. கடந்த வாரம் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பினரை புலிகளின் அரசியல்



வேண்டுகோள் விடுத்து வருகின்றார். இந்த வேண்டு கோள் மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற் றுள்ளது. ஆனால் 2006 ஆம் ஆண்டுவரை தாம் ஆட்சிப் பீடத்தில் இருக்கப்போவதாகவும் அதன் பிறகுதான் சனாதிபதித் தேர்தல் நடக்கும்எனவும் சனா திபதி கூறியுள்ளார். ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிர மசிங்க அவர்கள் சனாதிபதித் தேர்தல் தினத்தை வெளியிடும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு மாத்திரமே உள்ளது எனவும் சனாதிபதிக்கு தேர்தல் நடக்கும் நாட்களைத் தெரிவிக்க அதிகாரம் இல்லை எனவும் கூறியுள்ளார். ஆனால் இது வரை இது சம்பந்தமாக தேர்தல் ஆணையாளர் எந்தப் பதிலையும் கூறாமல் மௌனம் சாதிக்கின்றார். அவரின் தீர்மானம் என்ன வென்று இன்னும் சில வாரங்களில் தெரிந்து கொள்ள முடியும். அவர் எடுக்கும் தீர்மானம் சிலவேளைகளில் நீதிமன்றம் செல்வதற்கும் இடமுண்டு. இதற்கு

ரணில்விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயர் நீதி மன்றநீதியரசர், தேர்தல் ஆணை யாளர் இவர்களே எதிர்கால அரசி யலை நடத்துவதற்கு தீர்மானம் எடுப் பவர்கள். இந்தத் தீர்மானம்தான்

லங்காதீப சிங்கள நாளிதழ்
ரஞ்சித் ஆனந்த ஐயசிங்க
மொழியாக்கம். அ.சக்திவேல்

எதிர் கால அரசியலை நிர்ணயிக்கும். வேறு எவராலும் தீர்மானம் எடுக்க முடியாது. இவற்றை நாம் பொறுத் திருந்து தான் பார்க்கமுடியும்.

# காத்தான்குடியில் சோதனைக்கெடுபிடி மக்களிடையே அச்சம்

காத்தான்குடி பிரதேசத்தில் கடந்த இரு நாட்களாகப் படையினர் என்றுமில்லாதவாறு பலத்த பாது காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துடன் பிரதான கேந்திர நிலையங் களில் திடீர் சோதனை நடவடிக்கை யிலும் பொலிசார் ஈடுபட்டு வருகின் றனர். கடந்த திங்கள் 25ஆம் திகதி தொடக்கம் இந்த விசேட பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. காத்தான் குடிப் பொலிசாருக்கு மேலதிகமாக மட்டக்களப்பு, ஏறவூர், கல்குடா பிர தேசத்தில் இருந்தும் பெரு மளவிலான பொலிசார் காத்தான் குடிக்கு வரவழைக்கப்பட்டு பாது காப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு இருக்கின்றது. இது பற்றி காத்தான்குடி பொலிசாருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாலேயே இரட்டிப்பு பாது காப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டது.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 8.30 மணியளவில் பிரதான வீதியில் உள்ள மைய வாடியில் குண்டுச் சத்தம் ஒன்று கேட்டது. இது கிரனைட் சத்தம் என ஊர்ஜிதப்படுத்தப்பட்ட போதும் இத னால் எவருக்கும் எவ்வித பாதிப்பு ஏற்படாத போதும் சுமார் ஒரு மணி நேரம் பெரும் பதற்றமும் பீதியும் நிலவியது. இக்குண்டு வீசப்பட்டது எதற்காக என்பது இதுவரை தெரிய வில்லை. இச் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிசார் விசாரணை களை மேற்கொண்டு வருவதாக தெரி விக்கப்படுகிறது.

காத்தான்குடி குட்வின் பிரதான சந்தி, ரெலிகொம் சந்தி, காத்தான்குடி ஆரையம்பதி எல்லைச்சந்தி, பிரதான வீதி ஆகியவற்றில் காத்தான்குடி யிலிருந்து செல்லும் வாகனங்கள், உந்துருளிகள் உட்பட அனைத்து வாகனங்களும் பலத்த சோதனை நடவடிக்கையின் பின்னரே பயணத் துக்கு அனுமதிக்கப்படுகின்றன.

விசேட ரக்வண்டிகளிலும், பேருந்து களிலும் வந்து பொலிசார் குவிக்கப் பட்டு புதிய காத்தான்குடி உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதுடன் விசேட அதிரடிப் படையினர் ஈருருளிகளிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

# மாணவர்கள் ஒழுக்கத்திலும் சிறந்துவிளங்கவேண்டும் மட்டக்களப்பு மாவட்ட கல்விக்கழகதுணைப் பொறுப்பாளர்

மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டுமென தமிழீழ கல்விக்கழக மட்டக்களப்பு மாவட்ட துணைப் பொறுப்பாளர் தாயகன் தெரிவித்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் பாடசாலையில் மாணவர்கள் கல்வியைக் கற்பதுடன் மட்டுமல்லாமல் ஒழுக்கத் திலும் சிறந்து விளங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் தனியார் கல்வி நிலையங்களில் நடைபெறுகின்ற வகுப்புக் களில் மாணவர்கள் ஒழுக்கமற்றவர்களாகவும் தகாத சேட்டை பண்ணு கிறவர்களாகவும் மாறி வருகின்றனர். இந்நிலை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் எமது தமிழர் தாயகத்தில் கலாசாரச் சீர்கேடுகள் எந்தவிதத்திலும், நடைபெறக் கூடாது.

கல்வி, ஒழுக்கம் போன்றவற்றை கட்டிக்காக்க வேண்டியவர்கள் இம் மாணவர்களே! இவர்களே எதிர்காலத்தில் நாட்டை வழி நடத்துகின்றவர்களும், எதிர்கால சந்ததிக்கு எடுத்துக் காட்டானவர்களுமாக இருக்க வேண்டியவர்கள் எனக் குறிப்பிட்டார்.

# எமது இறையாண்மைக்கான போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும்!

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள பௌத்த பேரினவாதம் தலைவிரித்தாடுகிறது. இது தமிழ்பேசும் மக்களின் சனநாயக வழியில் அமைந்த எந்தவொரு தீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது.

இந்நிலையில் தமிழர் தாயகத்தில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தமிழ்பேசும் மக்களாகிய நாம் இன்று அடைந்துள்ள அவலமானதும், ஆபத்தானதுமான நிலையை சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோருகின்றோம்.

தமிழ்பேசும் மக்களாகிய நாம் இலங்கைத்தீவினை ஐரோப்பியர் ஆக்கிரமிக்க முன்னர் தனியரசாக இருந்து வந்துள்ளோம். 1833ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையில் ஒற்றையாட்சி முறையைப் புகுத்தியபோது தமிழர் தாயகம் சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டது. அப்பொழுது அது தன் இறைமையை இழந்ததையும், அதன்பின் 1948இல் இலங்கையை விட்டு ஆங்கிலேயர் வெளியேறியபோது தமிழ்பேசும் மக்களின் இறைமையை எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருந்த சிங்களவரிடம் ஒப்படைத்துச் சென்றதையும் சுட்டிக் காட்டுகிறோம்.

இவ்வாறு சிங்களச் சமூகம் முறையற்ற வகையில் பெற்றுக்கொண்ட இறைமையின் மூலம் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி மிக அநாகரிகமான முறையில் தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டனர். குடியுரிமை சட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான மலையகத் தமிழ்மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. தனிச் சிங்கள சட்டத்தின் மூலம் மொழியுரிமையும், வேலைவாய்ப்பு உரிமையும் பறிக்கப்பட்டன. கல்வித் தரப்படுத்தல் சட்டம் மூலம் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன மூலம் முழு மனித உரிமையும் மறுக்கப்பட்டது. எமது பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக நிலச்சூறையாடலுக்குட்பட்டு எமது குடித்தொகைப் பரம்பல் முற்றாகச் சிதைக்கப்பட்டது. இவ்வாறாகத் தமிழ் பேசும் மக்களாகிய எமது வாழ்வுரிமை பறிக்கப்பட்டது.

சட்டங்கள் மட்டுமன்றி இலங்கைத்தீவின் அரசியல் யாப்புக்களுமே இனவாத ஒடுக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. சோல்பரி ஆணைக்குழுவின் அரசியல் யாப்பில் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட 29ஆவது பிரிவு பின்னர் 72ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறிலங்கா சோசலிச சனநாயகக் குடியரசு யாப்பின் மூலம் நீக்கப்பட்டது. இந்த யாப்பில் பௌத்தம[illegible]ம் அரசாங்க மதமாக்க[illegible]ட்டு இன [illegible]குமுறைக்[illegible]ன யாப்பு [illegible]டிவமாக்கப்பட்டது. 7[illegible]ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பிலும் இது மேலும் தீவிரமாக்கப்பட்டது. எனவே நீதி வழங்கப்பட வேண்டிய அரசியல் யாப்பு அநீதியின் உறைவிடமானது.

இத்தகைய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழ்பேசும் மக்களின் அப்போதைய அரசியல் தலைமை அங்கீகரிக்கப்பட்ட நாகரிகமான அரசியல் வழிமுறைகளையும் மென்முறைப் போராட்டவடிவங்களையும் கைக்கொண்டது. அவற்றினைத் தணிவிக்கும் முகமாகச் சிங்கள ஆட்சியாளர்கள் ஒப்பந்தங்கள் செய்வதையும் பின் அவற்றினைக் கிழித்தெறிவதையும் வழமையாகக் கொண்டிருந்தார்கள்.

1957ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும் 1965ஆம் ஆண்டு டட்லி - செல்வா உடன்படிக்கையையும் இதற்குச் சான்றாக வைக்கின்றோம்.

## வவுனியா தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனம்

இவ்வாறாக மென்முறைப் போராட்ட வடிவங்களைக் கைக்கொண்டபொழுது எம்மக்கள் மீது மிக மோசமாக வன்முறைகள், இனப்படுகொலைகள், பாலியல் கொடூரங்கள் என்பன பிரயோகிக்கப்பட்டன.

இந்நிலையில் 70களின் முற்பகுதியில் ஆயுதம் தாங்கிய தமிழ்மக்களின் தற்காப்புக்கும் விடுதலைக்குமான போராட்டத்துக்கு தமிழர் தரப்பு நிர்ப்பந்திக்கப்படுகிறது.

எனவே, அமைதிவழியில் அரசியல் தீர்வுகளை எட்டுவது இயலாது என்பதை ஏற்றுக்கொண்ட தமிழ்த் தலைமைகள், 1976ஆம் ஆண்டு மே 14ஆம் நாள் வட்டுக்கோட்டையில் தமிழீழப் பிரகடனத்தை வெளியிட்டனர். பின்னர் அரசியல் அரங்கில் அதற்கான மக்கள் ஆணையை 1977ஆம் ஆண்டு நடைபெற்ற சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுக் கொண்டனர்.

ஆயுதம் தாங்கி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நாம் தமிழ் மண்ணையும், தமிழ்பேசும் மக்களையும் ஆழமாக நேசிக்கும் ஆற்றல் மிகுந்த சிறந்த ஒரு தேசியத் தலைவரையும், ஒரு மரபுவழிப் போரை நடத்தவல்ல படையணிகளையும் கண்டு நிமிர்ந்தெழுந்தோம். இதன்மூலம் இலங்கைத்தீவில் ஒரு தனித்தேசிய இனமாகத் தமிழ்மக்கள் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்னும் உண்மையை உலக அரங்கில் ஓங்கி ஒலித்தோம். இப்போராட்ட காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போதும் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பும், இன அழிப்பும் தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்டன. கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுகள், எறிகணை வீச்சுக்கள் ஆகியன பாடசாலைகளிலும், மக்கள் குடியிருப்புக்களிலும் வழிபாட்டுத் தலங்களிலும் அடிக்கடி நடத்தப்பட்டு எமது மக்கள் பச்சிளம் பாலகர் முதல் முதியோர்வரை கோரமாகப் பலியெடுக்கப்பட்டனர்.

பலவிதமான இராணுவ நடவடிக்கைகளாலும் சொந்த மண்ணிலிருந்து தமிழ்மக்கள் இடம்பெயர்க்கப்பட்டு, ஏதிலிகளாக அலைக்கப்பட்டனர், இத்தகைய அரச பயங்கரவாதக் கொடூரங்களையெல்லாம் 'அரசு' என்ற முகத்திரை கொண்டு சர்வதேச சமூகத்திற்கு முன் சிங்கள பௌத்த பேரினவாதம் மூடி மறைத்தது. ஆயினும், எமது விடுதலைப் போராட்டம் ஆக்கிரமிப்புக்களை எதிர்கொண்டு முறியடித்து வெற்றிகளைக் குவித்தது. இந்த வெற்றிகளின் பின்னால் தமிழ் மக்கள் அனைவரும் பொங்கு தமிழர்களாய் கிளர்ந்தெழுந்து தேசிய விடுதலைப்போருக்குத் தோள்கொடுத்தனர்.

இந்த வரலாற்றுப் போக்கில் தமிழர் தாயகத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு என்றொரு நடைமுறை அரசுக்கான கட்டுமானங்கள் நேர்த்தியான முறையில் கட்டியெழுப்பப்படுகின்றன.

இந்நிலையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை யுத்தத்தினால் வெல்லமுடியாது என்பதை சிறிலங்கா அரசுஉணர்ந்து கொண்டது. சமகாலத்தில் சர்வதேச சமூகம் இவ் இன முரண்பாட்டை அமைதிவழியில் தீர்ப்பதற்கான வாய்ப்பை எமது தேசியத் தலைமையிடம் கோரியது. எமது தேசியத் தலைமை தாமாக முன்வந்து யுத்தநிறுத்தம் செய்துகொண்டது.

வேறு வழியின்றியும், சர்வதேச அழுத்தம் காரணமாகவும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்பாடு செய்ய முன்வந்தது. அதன்படி 22.02.2002ஆம் நாளில் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் சிறிலங்காவின் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களும் தமிழீழத் தேசியத்தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களும் கையொப்பமிட்டு ஒரு யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

தொடர்ந்து ஆறுசுற்றுப் பேச்சுக்கள் நடாத்தப்பட்டன. இப்பேச்சுக்களின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்தத் தவறியது. இதனால் நேரடிப்பேச்சுக்கள் நின்றுபோக இடைக்கால யோசனையாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவு முன் வைக்கப்பட்டது. இதுபற்றியும் தொடர்ந்து பேச சிறிலங்கா அரசு முன்வராததால் பேச்சுவார்த்தை மீண்டும் தொடர்வதற்கான சாத்தியங்கள் முற்றாக அருகிப்போயின.

இவ்வாறாக கடந்த மூன்றரை ஆண்டுகளாய் தமிழ்மக்களின் இயல்பு வாழ்வுக்கான எதிர்பார்ப்புகள் யாவும் பொய்த்துப் போய்விட்டன. சிறிலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வளம்நிறைந்த எமது சொந்த நிலங்களும், செல்வம் கொழிக்கும் எமது கடல் வளமும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கப்பட்டுள்ளது.

இறுதியாக உலகை உலுக்கிய சுனாமிப் பேரழிவுக்குப் பின்னரும் சிங்கள மேலாதிக்கப் போக்கு மாறவில்லை என்பதை சுனாமி அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு நேர்ந்த விபத்து நிரூபித்தது. மனிதப் பேரழிவு அவலங்களால்கூட சிங்கள பௌத்த பேரினவாத வெறிக்குள் இறுகிப்போயிருக்கும் நெஞ்சுகளை மாற்றமுடியாது என்பதனை உலகம் கண்டுகொண்டுள்ளது.

இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டுப் பதவிக்கான போட்டியில் சிங்கள அதிகார வர்க்கம் முற்றாகச் சிக்கியுள்ளது. மீண்டும் ஒரு யுத்தத்தின் மூலம் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கான படைக்கலப்பெருக்க நடவடிக்கைகளையும், பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் அவர்கள் செய்து வருகின்றார்கள். இவை யாவும் சமாதான நடைமுறைக்கான சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு இலங்கைத்தீவில் நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இந்நிலையில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான எந்தவொரு தீர்வையும் முன்னெடுக்க மாட்டார்கள் என்பதை நாம் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்திக் கொள்கின்றோம். இந்த உண்மைகளை சர்வதேச சமூகமும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கால நடவடிக்கைகள் மூலம் புரிந்து கொண்டிருக்கும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

இந்த உண்மை நிலையின் காரணத்தினால் நாம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாகச் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். எனவே எமது தாயக நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் எமது மண்ணை, கடலை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்றும்,

எமது நிலத்தில், எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக கொள்ளும் சூழ்நிலை உருவாக வேண்டும் என்றும்,

அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ் மக்கள் அணி திரண்டபடியே உள்ளோம என்பதையும் இவ் எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதேவேளை,

தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக் கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம்.

## வவுனியா எழுச்சி மாநாட்டில்...







## ஆழிப்பேரலை நிவாரண நிதியாக சிறி.இற்கு 49மில்.யூரோ ஜேர்மன் வழங்கியது

சிறிலங்காவிற்கு ஆழிப்பேரலை நிவாரண நிதியாக 49 மில்லியன் யூரோவை ஜேர்மன் அரசு அளித்துள்ளது. சிறிலங்கா நிதியமைச்சு வட்டாரங்கள் இதைத்தெரிவித்தன.

ஜேர்மனிடமிருந்து சிறிலங்கா கடனாகப்பெற்ற 13 மில்லியன் யூரோவைத் திருப்பச்செலுத்தும் காலத்தை ஓராண்டு காலத்துக்கு அந்நாடு நீடித்துள்ளதாகவும் அரச தரப்பு தெரிவிக்கிறது.

ஜேர்மனுக்கும், சிறிலங்காவுக்கும் இடையே நிதியுதவி தொடர்பான ஒப்பந்தம் நேற்று முன்தினம் காலை கையெழுத்தானது. சிறிலங்காவுக்கான ஜேர்மன் தூதுவர் மற்றும் சிறிலங்கா நிதித்துறை செயலாளர் ஜயசுந்தர ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

வீடுகள் சீரமைப்பு மற்றும் குடிநீர் விநியோகம், சுகாதார சேவை உள்ளிட்ட பணிகளுக்கு இந்தநிதி பயன்படுத்தப்படும்.

## போர், சுனாமியால் பாதிப்புற்றோருக்கு உளவள ஆற்றுப்படுத்தல் அவசியம்

(மட்டக்களப்பு)

"போரினாலும், சுனாமியினாலும் பூரணமாகப் பாதிக்கப்பட்டது வட - கிழக்குப் பிரதேசம் ஆகும். பாதிப்புக்களில் பாரிய பாதிப்பு உளப் பாதிப்பு எனலாம். எனவே காலத்தின் தேவையாக உளவள ஆற்றுப்படுத்தல் விளங்குகின்றது. இவ்வாறு ஜேர்மனியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் பத்து நாள் உளவள ஆற்றுப்படுத்தல் சேவைத்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய சம்மாந்துறை வலய மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் இ.சுகிர்தராஜன் குறிப்பிட்டார். சம்மாந்துறை மற்றும் கல்முனை வலய ஆசிரியர்களுக்கான இப்பத்து நாள் விசேட செயலமர்வு சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரியில் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.பாஸ்கரன் தலைமையில் கடந்த ஞாயிறன்று நடைபெற்றது. அங்கு பணிப்பாளர் சுகிர் மேலும் பேசுகையில்;"வட - கிழக்கு மாகாண மக்கள் மற்றும் மாணவர்கள் கடந்த காலப்போரினாலும், சுனாமியினாலும் பல்வேறு உளநெருக்கிடைகளுக்கு ஆளாகியிருக்கின்றனர். யுத்தம் காரணமாக உரிமைகளை இழந்து உடைமைகளை இழந்து, உறவுகளை இழந்து தவிக்கின்றவர்கள் இலட்சக் கணக்கானோர் என்றும் கூறலாம் என்றார்.


### தமிழீழ நுண்கலைப்பிரிவின்

## கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரி

*வாராந்த மாலை நேர, சனி, ஞாயிறு,*

*கலைப்பயிற்சிகளுக்கான புதிய மாணவர் இணைப்பு*

இடம்–நுண்கலைக்கல்லூரி வளாகம், திருநகர் வீதி ஆரம்பம், கிளிநொச்சி நகரம்

ஆரம்பம்–19.08.2005 வெள்ளிக்கிழமை

காலம்– காலை 10.00 மணி

**ஆரம்பமாகவுள்ள கலைப்பிரிவுகள்**

* வாய்ப்பாட்டு
* ஓகன்
* நாடகமும் அரங்கியலும்
* வயலின்
* கிற்றார்
* மிருதங்கம்
* தபேலா
* அழகுக் கலைப்பயிற்சி
* நடனம்

மாலை நேர, சனி, ஞாயிறு, பகுதிநேர வகுப்புக்களுக்கு இணைவதற்கான மாணவர் தகுதி– படிமுறை (தரம் ) மூன்று வரை கலை ஆர்வமும், தேடலுமே முழுத்தகுதியாகும். படிமுறை மூன்றின் பின் உரிய கல்வித்தகுதி பேணப்படும்.

எதிர்வரும் 01.08.2005 அன்று தொடக்கம் காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 மணிவரை அலுவலக நேரத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து விரும்பும் கலைத் துறைகளுக்குப்பதிவு செய்யவும்.

(சி.12457) தமிழீழ நுண்கலைப்பிரிவினர்



*விசுவமடு அரசியல் துறையினரின் ஆதரவில் புலிகளின் குரல்*

*விசுவமடு வானொலி மன்றம் நடாத்தும் புலிகளின் குரலின் மாதாந்த*

## முத்தமிழ் கலையரங்கம்

இடம்:- விசுவமடு மைதானம்

காலம்:- 28.07.2005 வியாழக்கிழமை மாலை சரியாக 7.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகும்.

அனைவரும் முத்தமிழ் கலையரங்கத்தில் கலந்துசிறப்பிக் கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**நிகழ்ச்சி**

ஈகச்சுடரேற்றல்–அகவணக்கம்

வரவேற்பு நடனம்– வரவேற்புரை

தலைமையுரை–சிறுவர் நாடகம்

பேச்சு–சிறப்புரை

இசைக்கச்சேரி–தனிநடிப்பு

வில்லிசை– பட்டிமன்றம்

பேபி ஆசிரியையின் சங்கநாதம்

**விளம்பர அனுசரணை**

**சீர்கண்ணன் ஊர்தி சுத்திகரிப்பு நிலையம்**

**பரந்தன்–முல்லை நெடுஞ்சாலை, விசுவமடு**

(சி.12454)


## மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆதரவுடனேயே

## முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேயை எதிர்க்கிறேன்

### நந்தன மெண்டிஸ் கூறுகிறார்

சிறிலங்கா மேல்மாகாண சபையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதல்வராக மீண்டும் பொறுப்பேற்ற றெஜினோல்ட் கூரேயைச் சுதந்திரக்கட்சியின் முன்னாள் முதல்வர் நந்தன மெண்டிஸ் உள்ளிட்ட 10 உறுப்பினர்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் சுதந்திரக் கட்சிப்பொதுச்செயலர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரது ஆதரவுடன்தான் இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக முன்னாள் முதல்வர் நந்தன மெண்டிஸ் கூறியுள்ளார்.

இதனிடையே சுதந்திரக் கட்சியின் மெண்டிஸ் தலைமையிலான அதிருப்தியாளர் அணியுடன் இணைந்து செயற்படுவதில் ஜே.வி.பி.தீவிரம் காட்டி வருகிறது.அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களையும் தமது அணியில் இணைத்துக் கொள்வதில் ஜே.வி.பி. முயற்சி களை மேற்கொண்டு வருகிறது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி...

மலர்வு 14 . 07 . 1945



உதிர்வு 08 . 08 . 2004

அமரர்

## பரமசாமி மகேந்திரன்

தாங்கள் இப்பூவுலகில் வாழ்ந்த காலத்தில் பொது மக்களுக்கும் கூட்டுறவுச் சங்கத்திற்கும், உற்றார், உறவினர்,நண்பர்களுக்கும், குடும்பத்தினருக்கும் ஆற்றிய சேவைகளையும் சொல்லிலடங்கா பேருதவிகளையும் தங்களின் முதலாம் ஆண்டு நினைவு தினமாகிய இன்று நினைவு கூர்ந்து சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் நினைவாக ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அதனைத்தொடர்ந்து மதிய போசனமும் அன்னாரின் இல்லத்தில் இன்று 28.07.2005 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இல:–65/1விசுவமடு,
முல்லைத்தீவு.

(6394)

தகவல்
குடும்பத்தினர்.

# மன்மோகன்சிங்கின் அமெரிக்கப்பயணம்;

## பாராளுமன்றத்தில் விவாதம்

இந்தியப் பிரதமரின் அமெரிக்க சுற்றுப் பயணம் பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்ற கம்யூனிஸ்ட் கட்சிகளின் வற்புறுத்தலுக்கு மத்திய அரசு பணிந்துள்ளது.

பிரதமர் மனமோகன்சிங் சமீபத்தில் அமெரிக்க சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது அணு மின்சக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது.

## நினைவு கூருகின்றோம்...

மண்ணுலகில் 05.11.1952



விண்ணுலகில் 15.08.2004

மடியில் மலர்ந்தது 21.07.1977



மண்ணிற்காய் உதிர்ந்தது 28.07.2000

### காசிநாதர் குமாரசாமி

கண்டாவளை

### மேஜர் நம்பிமாறன் கெங்காதரன்

(குமாரசாமி நவீனன்)

கண்டாவளை

வீரப்புலிப்படையில்
வீறு கொண்டு சென்றவனே
தமிழீழம் காண்பதற்காய்
தரணியெங்கு சென்றவனே-நவீனா

ஆண்டுகள் ஐந்தாச்சு
ஆறிடுமோ எம்துயரம்
கல்லறைகள் தேடி
கதறுகிறோம் நாம் இங்கே

மாவீரரான மாறனோடு அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்,
கண்டாவளை.

(6388)

## தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### கொடிகாமம்

### வர்த்தக முகாமையாளர் பதவி வெற்றிடம்

01. சம்பள அளவுத் திட்டம்:
6500-9000 (கூ.வே.ஆ.சு நிருபம் 31/99இன் படி)
(120/10-130/10
(குறியீட்டு இல. 106/8 - 58/2003 இன் படி)

02. வயது:- 25 தொடக்கம் 40 வரை (சங்கப் பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)

03. முடிவு திகதி:- 10.08.2005

04. பிணைப்பணம்:- ரொக்கம் - 10000/=
ஆதனம் - 25000/=

05. 01. சங்கத்தில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுக் கொண்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
02. வேறு சங்கத்தில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களுடைய சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

06. விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) பருத்தித்துறை வீதி கொடிகாமம் என்ற முகவரிக்கு வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் என கடித உறையின் இடது பக்க மேல் மூலையின் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

07. **தகைமைகள்:-**
அ. கூட்டுவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை மட்டப் பதவியில் 03 வருட அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் வர்த்தகத்துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் 06 வருட அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகைமைகளையுடைய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக, கைத்தொழில், ஸ்தாபனத்தில் பொருட்கள் இறக்குமதி/ ஏற்றுமதி பொருட்கள் வழங்கல் விநியோகப் பகுதியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்தைப்படுத்தல் துறையில் முகாமை மட்டப் பதவியில் 04 வருட அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ்/ க.பொ.த (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனத்தில் பொருட்கள் இறக்குமதி ஏற்றுமதி, பொருட்கள் வழங்கல் விநியோகப்பகுதியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சந்தைப்படுத்தல் துறையில் முகாமை மட்டப் பதவியில் 06 வருட அனுபவம்.

தென்மராட்சி கிழக்கு,
ப.நோ .கூ.சங்கம்,
கொடிகாமம்.

(சி.12384)

பொதுமுகாமையாளர்.

## 05 ஆம் ஆண்டு நினைவலைகள்...




தமிழீழ காவல்துறை உபபரிசோதகர்

*ஜெகசோதி சந்திரமோகன்*

கருனாட்டுக்கேணி மணலாறு

தாயின் மடியில் :-18.12.1978
தாயக மண்ணில் :-28.07.2000



தமிழீழ காவல்துறை தலைமைக்காவலர்


*நாகமுத்து சந்திரகாந்தன்*

ஆவரங்கால் கிழக்கு
புத்தூர் யாழ்ப்பாணம்.

தாயின் மடியில் :-14.08.1977
தாயக மண்ணில்:-28.07.2000

ஓயாத அலைகள் 03 நடவடிக்கையின் போது நாகர்கோவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தனர்.

## 08 ஆம் ஆண்டு நினைவலைகள்...




தமிழீழ காவல்துறை தலைமைக்காவலர்

*கந்தசாமி மூர்த்தி*

செம்மண்வீதி, முருங்கன்
மன்னார்

தாயின் மடியில் :-23.02.1973
தாயக மண்ணில்:-31.07.1997



தமிழீழ காவல்துறை தலைமைக்காவலர்

*கந்தசாமி உதயச்சந்திரன்*

காரைநகர் யாழ்ப்பாணம்.

தாயின் மடியில் :-01.11.1977
தாயக மண்ணில்:-07.08.1997

ஜெயசிக்குறு எதிர்ச்சமர் நடவடிக்கையின் போது புளியங்குளம் வீதி,நெடுங்கேணிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்தனர்.

பொழுதெல்லாம் இருளாகிப் போனதனால்-விடிகாலைப்
பொழுதாகி எழுந்தீரே எம் தோழர்களே
விழுகின்ற உடல்கள் வேரறுந்து போனதனால்- நீங்கள்
விழுதெறிந்து வேரோடி விருட்சங்கள் ஆனீர்களே

வெடி ஓசை கேட்கின்ற போதினிலே- தயங்காது
முடிவோடு வந்தீர்களே- தாயக விடுதலைக்காய்

குடிமூழ்கிப் போகாது எம் தேசம்- உங்களது ஈகத்தால்
அடிவானில் இருள் அகல விடிவொன்று வருகின்றதே எமைத்தேடி

இனி ஒரு புதுயுகம் பிறக்கும் பிறக்கும்-உமை நினைத்தால்
கனிவுடை இதயமும் கரும்பாறை என இறுக்கும்-தலை
குனிவுடன் வாழாத் தலைவன் வழிப்பயணம் சிறக்கும் -மாவீரத்தால்
இனிப் புலிக்கொடி உலகெலாம் பறக்கும் உம் பெயர் உரைக்கும்.

இந்த மாவீரர்களுக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழீழகாவல்துறையினர்.

(6395)

# ஆஷஸ் தொடரை அவுஸ். கைப்பற்றுவதானால் அது வோர்ன்,மெக்ராத் கைகளிலேயே உள்ளது

**- ஜஸ்ரின் லாங்கர்**





ஆஷஸ் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றுவது மெக்ராத், வோர்ன் ஆகியோரின் கையில்தானுள்ளது என்று லாங்கர் கூறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்து டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள்கொண்ட ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி 239 ஓட்ட வித் தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரரான ஜஸ்டின் லாங்கர் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.அப்போதுஅவர் கூறியதாவது:

முதல் டெஸ்ட் கிரிக்கெட்டில் மெக்ராத் மற்றும் வோர்ன் பந்து வீச்சு அபாரமாக இருந்தது. இவர்களின் சிறப்பான பந்து வீச்சு முன்பு இங்கிலாந்து வீரர்கள் சவப்பெட்டிக்குள் அடைபட்டு கிடந்தவர்கள் போல் செயலற்றுப் போயினர்.

மேலும் தொடரின் வெற்றியை நிர்ணயிப்பதும் இவர்களாகத்தான் (மெக்ராத், வோர்ன்) இருப்பார்கள். பொதுவாக மெக்ராத்தின் பந்துவீச்சில் அவ்வளவு வேகம் இருக்காது. ஆனால் அவர் சரியான அளவில், அச்சுறுத்தும் விதத்தில் பந்து வீசு வதில் கில்லாடியாவார்.

வோர்னை எடுத்துக்கொண்டால் அவரது பந்துவீச்சு மெதுவாகத்தான் இருக்கும். இதனால் துடுப்பாட்ட வீரர்களுக்கு காயம் ஏற்படாது எனினும் இவரது பந்துவீச்சில் ஓட்டம் குவிப்பது கடினமான செயலாகும்.

அடுத்த போட்டிகளின் முடிவும் இங்கிலாந்துக்கு பாதகமாகவே இருக்கும். எங்களுக்கு அது சாதகமாக அமையும் என லாங்கர் தெரிவித்தார்.

## ஆஷஸ் தொடரில் றொப் கீயை இணைக்க சிபார்சு

இங்கிலாந்தின் கெண்ட் கவுண்டிஅணியில் துடுப்பாட்டத்தில் திறமைகாட்டிவரும் றொப்கீயை ஆஷஸ் தொடரில் இணைத்துக்கொள்ளலாம் என கெண்ட் அணியின் பணிப்பாளர் கிரஹும்போட் சிபார்சு செய்துள்ளார்.

கீ முதல்தரப்போட்டிகளில் ஆடி 968 ஓட்டங்களைப்பெற்று 61 சராசரியைப் பெற்றுள்ளார். பி.பி.சி.க்கு பேட்டியளித்த போட் தெரிவிக்கும் போது; கீயின் துடுப்பாட்டத்தில் தான் மிக்க நம்பிக்கை வைத்திருப்பதாகவும், ஆஷஸ் தொடரில் அவர் ஆஸி அணியின் பந்துவீச்சுக்கு முகம்கொடுத்து ஆடும் திறமை பெற்றிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அவர் நுட்பம் நிறைந்த ஆழ்ந்த சிந்தனையுடன் செயற்படுவார் என்றும் கூறிய போட்,ஏனைய அணிவீரர்களும் குறை கூறத் தக்கவர்கள் அல்ல என்றும், இவரையும் அணியில் இணைத்துக்கொள்வது நன்று எனவும்கூறினார். 2002-03 காலப்பகுதியில் 15 (ஆஷஸ் தொடர்) போட்டிகள் நான்கில் பங்கேற் றுள்ள கீ 17.62 என்ற சராசரியைப் பெற்றுள் ளார்.

## இந்திய அணியின் தொடக்க வீரராக லக்ஷ்மனை களமிறக்க சப்பல் விருப்பம்



லக்ஷ்மனை இந்திய அணியின் துவக்க ஆட்டக்கரராக களம் இறக்கவே பயிற்சியாளர் கிரேக்சப்பல் விரும்புவதாகக் கூறப்படுகிறது.

இந்திய அணியின் முன்னாள்டெஸ்ட் போட்டித் தொடக்க வீரரான சேத்தன் சவுகான் டோனியை தொடக்க வீரராக இறக்கலாம் என்று கூறியிருக்கிறார். ஷேவாக குடன்டோனி களத்தில்நின்றால் பொருத் தம் நன்றாக இருக்கும் என்று அவர் கூறினார்.

ஆனால் இதற்கு முன்னாள் வீரர் கீர்த்தி ஆசாத் எதிர்ப்புத் தெரிவிக்கிறார். டோனியால் தொடக்க பந்துகளை சந்திப்பது கடினமாக இருக்கும். மேலும் ஷேவாக்கும், டோனியும் ஒரே ஸ்டைலில் விளையாடக்கூடியவர்கள். எனவே அது சரியாக அமையாது என்று கூறினார்.

ஆனால் கீர்த்தி ஆசாத் புகுமுக வீரரான சுரேஷ் ரெய்னாவை தொடக்க ஆட்டக்காரராக இறக்கலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இந்திய மைதானங்களில் சுரேஷ் ரெய்னா நன்றாக விளையாடியிருக்கிறார்.

இலங்கை மைதானங்களும், இந்திய மைதானங்களைப் போலவே உள்ளன.இதனால் சுரேஷ் ரெய்னா சிறப்பாக விளை யாடலாம் என்று அவர் தெரிவித்தார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் மனீந்தர்சிங், யுவராஜ்சிங் தான் தொடக்க வீரருக்கு பொருத்தமானவர் என்று கூறியிருக்கிறார்.

## அவுஸ்திரேலிய அணியை எப்படியும் வீழ்த்துவோம் இங்கிலாந்து அணித்தலைவர் வோகன் சபதம்



அவுஸ்திரேலிய அணியை எப்படியும் வீழ்த்துவோம் என்று இங்கிலாந்து அணித்தலைவர் வோகன் சபதமிட்டுள்ளார்.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணிகள் இடையே ஆஷஸ் தொடர் போட்டி நடைபெற்று வருகிறது.

முதல் டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. அதில் அவுஸ்திரேலியா அபார வெற்றியை பெற்றது.இன்னும் நான்கு டெஸ்ட் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இரண்டாவது டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் நான்காம் திகதி நடைபெறுகிறது.

இந்த நிலையில் இங்கிலாந்து அணித்தலைவர் வோகன் லண்டனில் நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர், "இனி நடைபெறவிருக்கும் போட்டிகளில் இங்கிலாந்து அணி சிறப்பாக விளையாடும். எப்படியும் அவுஸ்திரேலியாவை தோற்கடித்தே தீருவோம்" என்று கூறினார்.

மேலும் அவர் நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், "அவுஸ்திரேலிய அணி வெல்ல முடியாத அணி அல்ல. சமீபத்தில்கூட எங்களிடம் அது தோற்றிருக்கிறது. எனவே மறுபடியும் எங்களிடம் அவுஸ்திரேலியா தோற்கும். இங்கிலாந்து அணியில் பல இளம் வீரர்கள் உள்ளனர். அனுபவமிக்க வீரர்களும் இருக்கிறார்கள். எனவே அடுத்து வருகிற போட்டிகளில் நாங்கள் வெற்றி பெறுவோம்" என்றும் தெரிவித்தார்.

## ஸ்டான்போர்ட் டென்னிஸ் சானியா மிர்ஷாவுக்கு வெற்றி

அமெரிக்காவின் கலிபோர்னியாப் பகுதியில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் ஸ்டான்போட் டென்னிஸ் நடக்கிறது. இந்தத் தொடரின் முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்ஷா கிரீஸ் வீராங்கனை எலினிடேனில்டோவை எதிர்த்து விளையாடினார். இதில் சானியா 7-6,2-6, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். இவர் இரண்டாவது சுற்றில் வீனஸ் வில்லியம்சைச் சந்திக்கிறார்.



மான்ட்ரியல் நடந்த உலக நீர் விளையாட்டுப்போட்டிகளில், பெண்களுக்கான 4ஓ100 மீ.ப்ரீ ஸ்டைல் பிரிவில் வென்ற பதக்கத்தை காட்டி மகிழ்கின்றார் அவுஸ்திரேலிய வீராங்கனைகள்.

## வலைப்பாடு ஜெகமீட்பர் வி.க.நடாத்தும் கொன்சலஸ் ஞாபகார்த்த கால்பந்துப்போட்டி





வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அனுசரணையுடன் பூநகரி பிரதேச விளையாட்டுத்துறையின் நடாத்தும் கொன்சலஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மாபெரும் உதைபாந்தாட்ட சுற்றுப்போட்டி வலைப்பாடு ஜெகமீட்பர் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.



33 அணிகள் கலந்துகொள்ளும் மாபெரும் உதைபந்து போட்டியில் நேற்றும், நேற்று முன்தினமும் நடைபெற்ற ஆறு போட்டிகளில்நாகபடுவான்பல்லவன்இரணைமாதாநகர் சென்மேரிஸ் அணியும், பூநகரி தோழர்கள் அணியும், கிளிநொச்சி சந்திரோதயா அணியும், பள்ளிக்குடா ஜொலிபோய்ஸ் அணியும்,இரணை மாதாநகர் சென்மேரிஸ் A அணியும், உருத்திரபுரம் அணியும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

## இலங்கை உதைபந்தாட்ட சங்கம் நடாத்தும் 13ஆவது பிரிவு கால்பந்துப் போட்டி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனமும்,இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும். 13வயதுப்பிரிவினர் களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில்யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, அளவெட்டி அருணோதயாக்கல்லூரி, யாழ்ப்பாணம் புனித பத்திசிரியார் கல்லூரி, யாழ்-பரியோவான் கல்லூரி, செங்குந்தா இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி , நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம், நாவாந்துறை றோ.க.த.க.பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி, சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம்,தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய பதினொரு பாடசாலைகள் பங்குகொள்கின்றன. இந்த அனைத்துப்போட்டியின் இறுதியாட்டம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. (கீ)

## பொன்விழா ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் போட்டி

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் கழகங்களுக்கு இடையிலான மேண்பந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பமாகின்றன.பதினைந்து பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மேற்படி போட்டித்தொடர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (08)

## பதிவு செய்யக்கோரிக்கை

கரப்பந்தாட்ட சங்க அனுசரணையுடன் வெண்புறா விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியாக நடாத்தும் அமரர் சிவகுருநாதன் (இளைப்பாறிய அதிபர் இளவாலை) ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இளவாலை வெண்புறா விளையாட்டுக்கழகமைதானத்தில் நடைபெறவுள்ளது. இச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் யாழ்.மாவட்டகழகங்கள் அனைத்தும் 10.08.2005 இற்கு முன்னர் இளவாலை காந்தி கல்வி நிலையத்தில் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.


## பூந்தோட்டம் கலைமகள் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

பூந்தோட்டம் கலைமகள் முன்பள்ளியின் எட்டாவது விளையாட்டுப்போட்டி கடந்த ஞாயிறு மாலை 2.30 மணிக்கு பூந்தோட்டம் கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பூந்தோட்டம் கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர் கனகரவி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் சிறப்புவிருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்விவலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் கணேசபாதம் , பூந்தோட்டம் மகாவித்தியாலய அதிபர் கருணாநிதி, ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா தேசியஎழுச்சி அமைப்பின் தலைவர் சபாநாதன், ஏற்பாட்டுக்குழுத்தலைவர் ஞானப்பிரகாசம் ஆகியோரும். கலந்து கொண்டனர்.

இவ்விளையாட்டுப்போட்டியில் நடைபெற்ற முன்பள்ளிச்சிறார்களின் "இசையும் அசைவும்" நிகழ்ச்சி பலரினதும் பாராட்டைப் பெற்றது. நன்றியுரை முன்பள்ளி ஆசிரியர் திருமதி. சிவகுமார் ராகினி நிகழ்த்தினார்.(10)

## சிந்தனைக்கு



தன்னிறைவான பொருளாதாரம் எமது தேசிய வாழ்வுக்கு மூலாதாரமானது; தனியரசு நிர்வாகத் திற்கு அத்திவாரமானது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28.07.2005
தொலைபேசி } 060-2213244
தொலைநகல் } 021-2283948
மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com

## ஏமாற்றம்!

யாழ். போதனாவைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதென பல வெளிநாட்டு கூட்டு அமைப்புக்களும், வெளிநாட்டு அதிகாரிகளும், வாக்குறுதிகளை வழங்கியபோதும் இவ்வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை என யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக அதிகாரிகள் வெளியிட்டுள்ள கவலை அவர்களின் ஏமாற்றத்தையே காட்டுவதாயுள்ளது.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் கொழும்பிற்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்வது வழமையான தொன்றாகிவிட்ட விடயம். இவ்வாறு விஜயம் செய்பவர்கள் வழமையாகச் செல்லும் இடங்களில் யாழ். போதனா வைத்தியசாலையும் ஒன்றாகும்.

வடக்கிலுள்ள ஒரே ஒரு பெரிய வைத்தியசாலை என்ற நிலையிலும், போதனா வைத்தியசாலை என்ற நிலையிலும், அதன் இன்றைய தேவைகள் மிக அதிகம். டாக்டர்கள் தொடக்கம் சிற்றூழியர்கள் வரையிலும் பற்றாக்குறையே உள்ளது. இதனைத் தவிர நவீன வைத்திய உபகரணங்கள், வைத்திய வசதிகள் என்பனவும், கிடைக்கப்பெறா நிலையே காணப்படுகின்றது.

இந் நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டவர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பல உதவித்திட்டங்களை அறிவிப்புச்செய்வதுண்டு. இத்தகைய உதவித் திட்டங்களில் பெரும்பாலானவை பேச்சளவில் இருந்துள்ளமையே ஒழிய நடைமுறையில் கிட்டவில்லை என்பதே வைத்தியசாலை வட்டாரங்களால் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள அதிருப்தியாகும்.

ஆனால் அறிவிக்கப்பட்ட உதவிகள் தனியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மட்டும் தான் வந்து சேரவில்லை என்பதல்ல. சுனாமி அனர்த்த மீள் கட்டுமானத்திற்கேற்ப பல அரசசார்பற்ற நிறுவனங்கள் வாக்குறுதிகளை அளித்திருந்த போதும் அவற்றை முழு அளவில் நிறைவேற்றியதாக இல்லை. ஆனால் இத்தகையதொரு நிலைக்கு தனியாக அரசசார்பற்ற நிறுவனங்களையும் குறை கூறி விட முடியாது.

ஏனெனில் ஒரு புறத்தில் சிறிலங்கா அரச தரப்பு, ஆயுதப் படைத் தரப்பு, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு என்பன அரசசார்பற்ற நிறுவனங்களின் நிவாரணப் பொருட்கள் உரிய முறையில் சென்றடைய அனுமதிப்பதாக இல்லை. அதாவது கட்டுப்பாடுகள், சோதனைகள் என்பன காரணமாக அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது பணிகளைச் செய்வதில் இடையூறு ஏற்படுத்தப்படுகின்றது. இது ஒருபுறம் இருக்க வடக்கு - கிழக்கிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மிகவும் நவீன சாதனங்கள் வந்து சேருவதற்கும், அரசாங்கம் அனுமதித்ததில்லை.

இவ்வாறு வரும் பொருட்களை ஏதோ ஒரு காரணத்தைக் கூறி விமான நிலையத்திலோ அன்றி துறைமுகத்திலோ அரசாங்கம் முடக்கி விடுவதுண்டு. இவ்வாறு முடக்கப்பட்ட பொருட்கள் நாடுகளுக்கு இடையிலான உதவியாக இருந்தால் சிறிது காலத்தின் பின்னர் தெற்கிலுள்ள வைத்தியசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுவதுமுண்டு. கடந்த காலத்தில் இதற்குப் பல்வேறு உதாரணங்கள் உள்ளன. சில சந்தர்ப்பங்களில் உபகரணங்கள் துறைமுகத்தில் கிடந்து பழுதடைந்ததுமுண்டு.

இந்த வகையில் அரசசார்பற்ற நிறுவனங்களும், வெளிநாடுகளும். வடக்கு கிழக்கிற்கு வழங்கும் உதவிகள் சென்றடைவதற்கு அரசாங்கத்தின் செயற்பாடுகள் முட்டுக்கட்டையாக உள்ளன. இது ஒருபுறமிருக்க அரச சார்பற்ற நிறுவனங்களில் பல தேவைகளைக் கண்டறிந்த பின்னரே அதற்கான நிதிதிரட்டலில் ஈடுபடுவதுண்டு. இந்நிலையில் நிதி கிடைப்பதில் தாமதமேற்படலாம். அன்றி நிதி கிடைக்காதும் போகலாம். இந்நிலையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட முடியாதவையாகிவிடும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமிழ்மக்கள் விவகாரத்தில் மனிதநேய நடவடிக்கைகள் குறித்துக் கூட என்றுமே அக்கறை காட்டியது கிடையாது. அவ்வாறு காட்டுபவர்களாக இருந்திருப்பின் யுத்தத்தினாலும், சுனாமிப் பேரழிவுகளிலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான உதவிகள் விரைவில் சென்றடைய நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பர்.

ஆனால் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் கூட தம்மால் பிரபலப்படுத்திக்கொள்ளும் விடயத்தில் காட்டும் அக்கறையை விடக் குறைந்தளவிலேயே தமது நடவடிக்கைகளில் காட்டுவதுபோன்றும் உள்ளது. அவ்வாறு இல்லாதுவிட்டால் வாக்குறுதிகளை அவர்கள் வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இதேபோன்றே வெளிநாட்டு அரசுகளும் உதவியளிப்பதாக வாக்குறுதியளித்து அவற்றை வழங்கியிருப்பின் அவை சென்றடைகின்றனவா எனவும் உறுதி செய்தல் வேண்டும்.

அவ்வாறு இல்லாது வாக்குறுதிகளை அளித்துவிட்டு உதவிகளைச் செய்யாது விடிலோ. அன்றி உதவிகள் வழங்கியும் வந்தடையாது விடிலோ அந்நாடுகள் மீதும், அந்நிறுவனங்கள் மீதும் அவநம்பிக்கையே ஏற்படும். இவை அவற்றின் நற்பெயருக்கு களங்கத்தை விளைவிப்பவையாகவே இருக்கும்.

# ஊடக சுதந்திரம், சனநாயகத்திற்கு அரச தரப்பினால் அச்சுறுத்தல்

## - தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

(கொழும்பு)

பிரதியமைச்சர் மேர்வின் சில்வா ஊடகங்களை தரக்குறைவாகப் பேசியதையும், ஊடகவியலாளர்களை அச்சுறுத்தியதையும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

பொறுப்புவாய்ந்த பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா இவ்வாறு நடந்து கொண்டதன் மூலம் ஊடக சுதந்திரத்திற்கும், சனநாயகத்திற்கும் வெளிப்படையாகவே அரச மட்டத்தில் இருந்துகொண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தாங்கள் கருதுவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

"தனது மகனின் வழக்கு விசாரணை ஒன்றிற்காக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு 25.07.2005 அன்று காலை வருகை தந்த பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவை படம் எடுப்பதற்காகவும் குறித்த வழக்கு விசாரணை தொடர்பான செய்திகளைப் படம் சேகரிப்பதற்காகவும் அங்கு ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடியிருந்தனர்.

அவ்வாறு ஒன்று கூடியிருந்த ஊடகவியலாளர்களுள் மகாராஜா கூட்டு நிறுவனத்திற்கு சொந்தமான "சிரச" தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களையும், "சுவர்ணவாகினி" தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களையும், தரக்குறைவான வார்த்தைகளினால் பிரதியமைச்சர் விமர்சித்திருக்கின்றார். அத்துடன் "வீரகேசரி" படப்பிடிப்பாளர் எஸ். சுரேந்திரனின் கமராவில் இருந்து படச்சுருளையும் அபகரிக்க முற்பட்டிருக்கின்றார்.

பிரதியமைச்சரின் அநாகரிகமான இந்த நடவடிக்கை அனைத்து சமூகத்தினரையும் வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது. ஊடக சுதந்திரம் பற்றிப் பேசும் புதிய பிரதியமைச்சர் டிலான் பெரேராவும் அரசாங்கமும் பிரதியமைச்சரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் அதிகாரமும் வர்க்க ஆதிக்கமும் உள்ளவர்களிடமிருந்து ஊடக சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

அதேவேளை கோட்டை புகையிரத நிலையம் முன்பாக ஜே.வி.பி நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளை சேகரிக்கச் சென்ற "சுடரொளி" செய்தியாளர் எம்.ஐ. முபாரக் ஜே.வி.பி. ஆதரவாளர்களால் இம்சிக்கப்பட்டுள்ளார். அவரைத் தாக்கவும் முற்பட்டுள்ளனர். அவரது கடமைக்கு இடையூறாக இருந்ததோடு செய்தி சேகரிக்க விடாமல் முபாரக்கை அந்த இடத்திலிருந்து ஆதரவாளர்கள் துரத்தியிருக்கின்றனர்.

ஆகவேதான் இந்த நாட்டின் ஊடக சுதந்திரம் கேள்விக்குறியான நிலையில் இருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. ஊடகத்துறைக்கு எதிரான சர்வாதிகாரப் போக்குகளைக் களைந்து நீதியான சுதந்திரமான ஊடக செயற்பாட்டிற்கு அரசாங்கம் உறுதியளிக்க வேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறான ஊடகவியலாளர்களுக்கு எதிரான இழிநிலை இனிமேலும் தொடரக்கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றோம்."

இவ்வாறு இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்.-சிறி. இராணுவ ஒப்பந்தத்தால் பாக்.இற்கு எந்த அச்சுறுத்தலுமில்லை

## -பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

இந்திய-சிறிலங்கா இராணுவ ஒப்பந்தம் குறித்து நாம் அறிந்திருக்கவில்லை. எனினும் நாம் இவ் ஒப்பந்தத்தால் பாகிஸ்தானுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று பாகிஸ்தான் கருத்துத் தெரிவித்துள்ளது.

கொழும்பு வந்துள்ள பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் குர்சித் எம் கசூரி இது தொடர்பாக மேலும் கூறியதாவது;

சிறிலங்கா ஒரு இறையாண்மையுள்ள நாடு. அதன் நலனுக்காக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளலாம். சிறிலங்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லுறவு நீடித்து வருகிறது.

இந்திய- சிறிலங்கா இராணுவ ஒப்பந்த சாத்தியம் குறித்து நாம் அறிந்திருக்கவில்லை. இருப்பினும் அத்தகைய ஒப்பந்தத்தால் எவ்வித அச்சுறுத்தலும் இல்லை.

சிறிலங்காவின் இராணுவ அதிகாரிகள் பெருமளவில் சிறிலங்கா அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கான சிறிலங்காவின் வேட்பாளரை ஆதரிப்பது குறித்து பரிசீலித்து வருகிறோம். இருப்பினும் அது குறித்து கருத்துச் சொல்வதற்கு இது உகந்த காலம் அல்ல.

சிறிலங்காவின் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது சிறிலங்காவின் உள்விடயம். அதில் நாம் தலையிட விரும்பவில்லை. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மசூதிகளையும், வீடுகளையும் கட்டித்தர பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது என்றார் கசூரி.

# மேல் கொத்மலை மின்உற்பத்தி நிலைய ஆரம்பக்கட்டப்பணிகள் அடுத்தவாரம்!

## - சிறிலங்கா மின்சக்தி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

மேல் கொத்மலை மின் உற்பத்தி நிலையத்தை தொடங்குவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் அடுத்தவாரம் தொடங்கப்படும் என்று சிறிலங்கா மின்சக்தியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

முதல் கட்டத்தில் அடிப்படை வசதிகளை பலப்படுத்தல், இடம் பெயர்பவர்களை மீள்குடியமர்த்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

மேல்கொத்மலை திட்டத்தினூடாக 150 மெகாவாற் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் உட்பட்ட சிலரின் எதிர்ப்பினால் இந்தத் திட்டம் பல வருடங்களாக முடக்கப்பட்டுக் கிடக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மின்சாரசபை சீரமைப்பு தொடர்பாக சனாதிபதி - அதிகாரிகளுடன் பேச முடிவு

## –ஓகஸ்ட் முதல் திகதி சந்திப்பு

(கொழும்பு)

மின்சாரசபை சீரமைப்புத் தொடர்பாக ஓகஸ்ட் முதலாம் திகதியன்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவுக்கும் மின்சாரசபை உயர் அதிகாரிகளுக்கும் இடையே சந்திப்பு நடைபெறவுள்ளது.

சிறிலங்கா மின்சாரசபையின் தற்போதைய நிலவரம், மறுசீரமைப்பு தொடர்பாக இச்சந்திப்புக்களில் விவாதிக்கப்படவுள்ளது.

மின்சாரசபையின் தலைவர் ஆனந்த குணசேகர, முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா, நிதி முகாமையாளர் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொள்கின்றனர்.

நிதியறிக்கை மற்றும் தர அறிக்கை போன்றவற்றையும் இந்த சந்திப்பிற்கு வரும்போது எடுத்து வருமாறு சந்திரிகா குமாரதுங்க பணித்துள்ளார்.

# மானியங்கள் ஆணைக்குழு தலைவரை விசாரணைக்குட்படுத்த வேண்டுகை!


(கொழும்பு)


கல்வி மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மீது விசாரணை நடத்த வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திர ஊழியர் சங்கத்தின் பல்கலைக்கழக கூட்டு அதிகார குழு கோரிக்கை விடுத்துள்ளது.


பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் ரன்ஜித் மெண்டிஸ் பதவி வகிக்கும் இந்த மூன்று வருட காலத்தினுள் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் இதுவரை மூன்று வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டிருப்பதாக அக்குழுவின் தலைவர் பி.சி.பிரேமசிறி தெரிவித்தார்.

ரன்ஜித் மெண்டிஸ் உள்ளிட்ட மானியக்குழுவின் அதிகாரிகளின் நடவடிக்கைகளால்தான் கல்விசாரா ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் மீது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரேமசிறி மேலும் வலியுறுத்தினார்.

# வவுனியா எழுச்சி மாநாட்டில்





# புலிகளை அமெரிக்கா தடைசெய்துள்ளமை அதன் இராஜதந்திர முயற்சிகளுக்குத்தடை

## — முன்னாள் அமெரிக்கத் தூதுவர் கருத்து

விடுதலைப்புலிகளை அமெரிக்கா சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்துள்ளமை, இலங்கையில் அமெரிக்காவின் இராஜதந்திர முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் டெரெசிட்டா சி. ஸ்காவ்வர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளுடன் அமெரிக்கா நேரடியாக தொடர்புகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் இணையத்தளமொன்றிற்கு அளித்துள்ள பேட்டியில் அவர் வலியுறுத்தியுள்ளார். விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை விஸ்தரிப்பதற்கான படிப்படியான கொள்கையொன்றையும் வலியுறுத்தியுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, விடுதலைப்புலிகள் அமைப்பினை சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது, இலங்கையில் அமெரிக்காவின் இராஜதந்திரத்தினைப் பாதித்துள்ளது. மேலும், அமெரிக்காவின் பயங்கரவாதச் சட்டமும், பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலும் அமெரிக்காவின் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு பிரச்சினையாக அமைந்துள்ளன. இதனை அமெரிக்கா புத்திசாலித்தனமாக கையாளவில்லை. குறிப்பாக, பட்டியலில் உள்ள அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், அமெரிக்க அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்புகள் குறித்து சுட்டிக்காட்டுகின்றேன்.

சமாதான முயற்சிகள் உண்மையில் நடைமுறையில் உள்ளபோது, சமாதானத்திற்காக பாடுபடுபவர்கள் அமெரிக்க அரசாங்கம் உட்பட விடுதலைப்புலிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் தாங்கள் கலந்து கொள்வதற்கான சட்டபூர்வ அந்தஸ்து உள்ளவர்கள் எனக்கருதும கூட்டங்களை அமெரிக்காவிலோ அல்லது இதே போன்ற கொள்கை உடைய ஏனைய நாடுகளிலோ நடாத்தக்கூடாது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை விஸ்தரிப்பதற்கான படிப்படியான கொள்கையொன்று அவசியம்.

விடுதலைப்புலிகளை புனர்நிர்மாணப் பணிகளை முகாமைத்துவம் செய்யும், திட்டமிடும் நடைமுறைகளுக்குள் கொண்டு வருவது பலாபலன்களை அளிக்கக்கூடியது.

இது இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் சிறிய, சிறிய உறுதியான விடயங்களைச் செய்வதற்கும் இதன் மூலம், முதலாவது கட்ட பலவீனமான நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் உதவும். வழமையான உதவிகளும், கடல்கோள் உதவிகளும் இலங்கை சமாதான பலாபலன்களை உருவாக்குவதற்கு உதவக்கூடியவை. நிதியின் அளவை விட ஒன்றாக இணைந்து செயற்படுவதே முக்கியம் என்றார்.

# ஈ. பி. டி. பி. குழு உறுப்பினர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு புதுநகரில் நேற்று முன்தினம் இரவு ஈ.பி.டி.பி. உறுப்பினரான மேகன் எனப்படும் பங்கிராசா ரமேஸ் (வயது-27) இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தனது தொழில் தொடர்பாக வெளியே சென்று வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருக்கையில், வீதியில் வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சிறிலங்கா பொலிசார் தெரிவித்தனர்.

நெற்றியிலும், இடது கண்ணிலும், இடது காலிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்குள்ளான இவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

# கொழும்பு விடுதியில் தங்கியிருந்த தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

கொழும்பு டாம் வீதியில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை கிருபா (வயது-24) என்ற இந்த இளைஞர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பு டாம் வீதி உசைனியா ஒழுங்கையிலிருக்கும் விடுதியில் தங்கியிருந்தார்.

சம்பவம் நடந்த விடுதிக்கு நேற்று முன்தினம் 12.45 மணிக்கு வந்த இருவர் அவரை வெளியே அழைத்துச் சென்று துப்பாக்கியால் சுட்டுள்ளனர். துப்பாக்கிச்சூடு நடாத்தியவர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

கழுத்துப்பகுதியிலேயே சுடப்பட்டுள்ளது. உடனடியாக இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு இவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்ட போதிலும் நேற்றுக் காலை அவர் மரணமடைந்தார்.

## தமிழ்...

மீண்டும் மாலை 6.15 இற்கு வவுனியா குருமன்காடு யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம் அருகே மூன்றாவது குண்டு வெடித்தது. (10)

# 800 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களில் 203 பேருக்கே நிரந்தர நியமனம்

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக பல வருடங்களாகப் பணிபுரிந்து வருகின்ற சுமார் 800 பேர்களில் 203 பேருக்கு நேற்று நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.

இலங்கை ஆசிரியர் சேவையில் வகுப்பு 03 - தரம் 02 க்குள் உள்வாங்கும் நியமனக் கடிதங்கள் மாகாணக் கல்வி அமைச்சின செயலாளர் இ. தியாகலிங்கத்தினால் நேற்று பகல் மாகாணக்கல்வி அமைச்சின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்து, பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் செயலாளர் தியாகலிங்கம் தலைமை வகித்தார். சிரேஷ்ட உதவிச் செயலாளர்களான எம். கே. எம். ஹனிபா, தயானந்த ஜயவீரா. கல்விப் பணிப்பாளர் எஸ். சரவணபவன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் ஆகியோரும் பங்குபற்றினர். நிரந்தர நியமனம் பெறாதுள்ள எஞ்சிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் நிரந்தர நியமனம் பெறக்கூடியதான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று நிகழ்வில் பேசிய செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்தார். (20)

## நான்கு..

செய்தியாளர்கள் நேற்று மாலை ஓமந்தை சிறிலங்கா இராணுவ சோதனை நிலையத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கைதான இவர்கள் வவுனியா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் நேற்றிரவு விடுதலை செய்யப்பட்டனர்.

## கே 8...

அதிகாரிதளபதி டொனால் பெரேராவிடம் கையளித்தார். இந்த ரக விமானங்கள் 2001 ஆம் ஆண்டு முதன் முதலில் சிறிலங்காவில் பயன்படுத்தப்பட்டது. கட்டுநாயக்கா விமானத் தளத்தாக்குதலின் போது இந்த விமானங்கள் அழிக்கப்பட்டிருந்தன. தற்போது மீண்டும் சிறிலங்கா விமானப்படையில் சேர்க்கப்பட்டுள்ளது.

## அறிஞர்கள்..

தொடர்ந்து ஆசியுரையினை யாழ். மாவட்ட இந்து குருமார் ஒன்றிய செயலாளர் சிறீலசிறி சந்திரசேகர சர்மா, தென்இந்திய திருச்சபையின் யாழ். முன்னாள் ஆயர் அதி வண கலாநிதி எஸ். ஜெபநேசன் ,வவுனியா நகரப் பள்ளிவாசல் மௌலவி ஆகியோர் நிகழ்த்தினர்.

இம்மாநாட்டில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழினி , தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மலையக மக்கள் முன்னணித்தலைவர் பெ.சந்திரசேகரன், மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன், மேல்மாகாண மக்கள் முன்னணிபிரதித் தலைவர் கலாநிதி குமரகுருபரன், மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா, வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர், இளம்பரிதி, முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முருந்தன், ,மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் அலை, கிளிநாச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் திருமதி மகேஸ்வரன், வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி பேர்னாட், வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் விசாகலிங்கம் உட்படப் பல்லாயிரக்கணக்கான பேராளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட கல்விப் புறக்கணிப்பு என்ற ஆய்வறிக்கையினை யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி நந்தகுமார் அவர்களும், தமிழ் இனப்படுகொலைகள் என்ற ஆய்வறிக்கையினை மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதி முன்னாள் அதிபர் கிருஸ்ணபிள்ளை அவர்களும், சிறிலங்கா அரசின் கடல்வலய ஆக்கிரமிப்பும் கடல் வளச்சியும் என்ற ஆய்வறிக்கையி னை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனச் செயலாளர் சு. சூரியகுமார் அவர்களும், இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசம் என்ற ஆய்வறிக்கையினை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ச.விஜயரூபன் அவர்களும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் நிலப்பறிப்பும் என்ற ஆய்வறிக்கையினை திருகோணமலை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதிய ஸ்தாபகத் தலைவர் க.தேவகடாட்சம் அவர்களும், இடப்பெயர்வும் அவலவாழ்வும் என்ற ஆய்வறிக்கையினை மன்னார். தேசிய எழுச்சிப்பேரவையைச் சேர்ந்த சூ.பத்மநாதன் அவர்களும், சிறிலங்கா அரசினால் தமிழர் தாயக விவசாயிகள் புறக்கணிப்பு என்ற ஆய்வறிக்கையினை கிளி.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றிய உபதலைவர் இ.கணேசபிள்ளை அவர்களும், தாயகப் பகுதிகளில் பேரினவாதிகளின் திட்டமிட்ட பொருளாதாரச் சீர்குலைப்பு என்ற ஆய்வறிக்கையினை யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் செல்வி வே.ஜெயகலா அவர்களும், தமிழர் தாயகப் பகுதிகளில் கடற்கோள் அழிவுகளும் அரசின் பாராமுகமும் என்ற ஆய்வறிக்கையினை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உபசெயலாளர் இ.செல்வநாயகம், அவர்களுக்கு சிறிலங்கா அரசினால் கிறிஸ்தவ மதப்புறக்கணிப்பு என்ற ஆய்வறிக்கையினை மன்னார் மறை மாவட்ட ஆயர் ஆண்டகை கலாநிதி இராயப்பு ஜோசப் அடிகளார் அவர்களும், முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் மீதான பேரினவாத அரசின் அடக்குமுறை என்ற ஆய்வறிக்கையினை யாழ். மாவட்ட முஸ்லிம் மக்களிற்கான பணிமனை இயக்குநர் மௌலவி எஸ்.எம். சகீ அவர்களும், சிறிலங்கா அரசினால் இந்துமதப் புறக்கணிப்பு என்ற ஆய்வறிக்கையினை திருகோணமலை பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தைச்சேர்ந்த திருமதி .கண்மணி இரத்தினவடிவேல் அவர்களும், தமிழ்ப் பெண்கள், குழந்தைகள் மீதான சிறிலங்கா பேரினவாதத்தின் தாக்கம் என்ற ஆய்வறிக்கையினை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் அவர்களும், ஈழத்தமிழர் அரசியல்வரலாறு என்ற ஆய்வறிக்கையினை அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு அவர்களும் வாசித்தனர்.

இந்நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஆகியோர் கருத்துரை ஆற்றினர். சிறப்புரையை தமிழ்நாடு அரசு கவின்கலைக் கல்லூரி பேராசிரியர் ஓவியர் புகழேந்தி நிகழ்த்தினார்.

சிறப்புக் கருத்துரைகளை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர். இறுதியாக வரலாற்று சிறப்புமிக்க தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டு பிரகடனத்தை யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் துறைத்தலைவர் க.சிதம்பரநாதன் வெளியிட்டு வைத்தார். இரவு 9.00 மணியளவில் மாநாடு நிறைவு பெற்றது. (10)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது